# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

தீங்கட்கிழமை 11.10.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் கையை முறுக்கிதான் இலங்கை- இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது

(ரக்ஸனா)



இந்திய அரசினால் அப்போதிருந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் கையை முறுக்கிதான் இலங்கைஇந்திய ஒப்பந்தம் ஏற்பட்டுத்தப்பட்டது என்பது பலருக்குத் தெரியுமோ தெரியாது. அந்த நேரத்தில் களத்திலே நின்ற எனக்குத் தெரியும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர கோவிந்தன் கருணாகரம்(ஜனா) தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...


## கல்முனை மாநகர சபையில் ஊழலா?

### ஆதாரங்களை முன்வைத்தால் தண்டனை பெற்றுக் கொடுக்கத் தயார் என்கிறார் மேயர் றகீப்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையில், மாநகர ஆணையாளர் மற்றும் கணக்காளர் ஆகியோர் ஊழல், மோசடிகளில் ஈடுபடுகின்றனர் என்று குற்றஞ்சாட்டும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல், அதற்கான ஆதாரங்களை முன்வைத்து, நிரூபிப்பாரானால் அவ்வதிகாரிகளை சட்டத்தின் முன்னிறுத்தி அதற்கான தண்டனையை பெற்றுக் கொடுப்பதற்கு, தான் தயாராகவிருப்பதாக மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர சபையினால் சாய்ந்தமருது பிரதேசம் புறக்கணிக்கப் படுவதாக ஜெமீல்



02 ஆம் பக்கத்தில்...

## புதிய அரசியலமைப்பு, புதிய தேர்தல் முறைமையை ஏற்படுத்துவதற்கு

### நடவடிக்கை ஜனாதிபதி உறுதி



மக்களுக்கு உறுதியளித்தவாறு புதிய அரசியலமைப்பு மற்றும் புதிய தேர்தல் முறைமையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மேலும்,ஊழல், மோசடிகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டு மாநகரசபையில் இடம்பெற்றுள்ள குழப்பம் கூட்டமைப்பின் கீழுள்ள சபையின் நடவடிக்கைகளைக் குழப்பும் நோக்கம் கொண்டது




(மட்டுநிருபர்)

மாநகர ஆணையாளரை வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மாநகரசபையின் நடவடிக்கைகளைக் குழப்புவதும், அதன் மூலமான அபிவிருத்தியினைத் தடைப்படுத்துவதுமே முழு குறிக்கோளாக இருக்கின்றது என மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர்

02 ஆம் பக்கத்தில்...

## திசர பேரோவின் பந்தை எதிர்கொண்ட கோட்டா



72ஆவது இராணுவ கொண்டாட்டத்தை முன்னிட்டு அநுராதபுரம் சாலியபுரவிலுள்ள கஜபா கட்டளைத் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கிரிக்கெட் மைதானத்தையும் திறந்து வைத்தார்.

## அரசாங்க தமது தேவைக்காக அப்பாவி இளைஞர்களை சிறையில் வைக்கவும் செய்வார்கள்



(துதிமோகன்)

இந்த அரசாங்கமானது தேவையென்று சொன்னால் எவரையும் தனது மடியில் வைத்துக்கொள்ளவும் தமது தேவைக்காக அப்பாவி இளைஞர்களை

10 ஆம் பக்கத்தில்...

## பயப்படாதீர்கள்: இந்தியாவுக்கு ஆறுதல் கூறிய மிலிந்த மோரகோட



இலங்கையில் சீனாவின் முதலீடுகள் காரணமாக இந்தியாவின் நலன்களிற்கு பாதிப்பு ஏற்படாது என இந்தியாவிற்கான இலங்கையின் தூதுவர் மிலிந்த மொராகொட தெரிவித்துள்ளார்.

டைம்ஸ் ஒவ் இந்தியாவிற்கு வழங்கியுள்ள பிரத்தியேக போட்டியிலேயே மிலிந்த மொராகொட இவ்வாறு தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## சரியானவர்களின் கைகளில் அதிகாரங்கள் கிடைக்காமையே தமிழ் மக்களின் துயரத்துக்கு காரணம்

(யாழ். கீதன்)

கடந்த காலங்களில் சரியானவர்களின் கைகளில் அதிகாரங்கள் கிடைக்காமையினாலேயே தமிழ் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக கடற்கொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இடைநிறுத்தப்பட்ட கலாசார சுற்றுலா சிறப்புக்



02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் மதுபானத்துடன் நஞ்சருந்தியதில் இரு பேண்கள்

### அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதி

(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ராஜவரோதயம் வீதியில் அமைந்துள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் இரண்டு பெண்கள் உட்பட சிறுவர் ஒருவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் இன்று பிற்பகல் ஒன்று முப்பது மணி அளவில் மது போதையுடன் நஞ்சருந்திய நிலையில்

02 ஆம் பக்கத்தில்...






## அமைச்சர் ஹெகலிய உறுப்பினர் ராஜன் சந்திப்பையடுத்து நடவடிக்கை!

### பனங்காடு வைத்தியசாலை 24 மணிநேரமும் இயக்கம்

(வி.ரி.சகாதேவராஜா )

சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்லவை கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் சந்தித்து கலந்துரையாடியதன் பலனாக பனங்காடு பிரதேச வைத்தியசாலை 24மணிநேரமும் இரவுபகலாக இயங்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

அமைச்சரைச்சந்தித்து 24மணிநேரத்துள் அவ்வைத்தியசாலை 24மணி

10 ஆம் பக்கத்தில்...











## தமிழ் புறக்கணிப்பு



இலங்கையின் முதற்பிரஜை மொழிக் கொள்கையை பின்பற்ற வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் புறக்கணிப்பு

மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

72ஆவது இராணுவ கொண்டாட்டத்தை முன்னிட்டு அநுராதபுரம் சாலியபுரவிலுள்ள கஜபா கட்டளைத் தலைமையகத்தில் கோட்டாபய ராஜபக்ஷ கிரிக்கெட் மைதானத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, திறந்து வைத்தார்.

ஜனாதிபதியால் திறக்கப்பட்ட நினைவுப் படிகத்தில் சிங்களம் மற்றும் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டிருந்ததுடன், அதில் தமிழ் இடம்பெறாததையடுத்தே மேற்கண்ட பதிவை தனது டுவிட்டர் பக்கத்தில் மனோ கணேசன் எம்.பி பதிவிட்டுள்ளார்.

விளையாட்டரங்கமாக இருக்கலாம்! விளையாட்டாகவே இருக்கலாம்! அன்னை இலங்கையின் பேரில், முதல் பிரஜை, அரசியலமைப்பின் மொழிக் கொள்கையை பின்பற்ற வேண்டும். அடுத்த மூன்று வருடங்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செய்யப் போகும் பிழைதிருத்தங்களில் மொழிகொள்கையை பின்பற்றுவதும் ஒன்றாய் இருக்க பிரார்த்திக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## திருமலையில் மதுபானத்துடன் நஞ்சருந்தி

அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது

ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பு பகுதியிலிருந்து 29, மற்றும் 19 வயது மற்றும் இரண்டரை வயதுடைய மூவரும் திருகோணமலையிலுள்ள தனியார் ஹோட்டலில் நேற்று தங்கி இருந்ததாகவும் இருவரும் நேற்று முன்தினம் (10) காலை 11 மணி வரை கதவை திறக்காமையினால் இரண்டரை வயது சிறுமி அழுததையடுத்து ஹோட்டல் உரிமையாளர் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தல் வழங்கியதாகவும் தெரியவருகின்றது.

இதனையடுத்து குறித்த இரண்டு பேரையும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இரண்டு பேருமீ அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

ஆனாலும் இவர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

## சரியானவர்களின் கைகளில் அதிகாரங்கள்

கற்கை நெறியை தொடருவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட மெய்நிகர் வழியூடான கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது, மக்களோடு வாழ்ந்து மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு அவற்றை தீர்த்து வைக்கக் கூடியவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியதுடன்,

கடந்த காலங்களில் எமது தலைமைகளின் தவறான அணுகுமுறைகள் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்களை சுட்டிக்காட்டிய அமைச்சர், அந்த அனுபவங்களை படிப்பினையாகக் கொண்டு எதிர்காலத்தில் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

## புதிய அரசியலமைப்பு, புதிய தேர்தல்

போவதில்லை என்றும் அதற்காக, அனைத்து அதிகாரிகளும் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டுமென்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கை இராணுவத்தின் %2 ஆவது ஆண்டு பூர்த்தியையொட்டி, அநுராதபுரம் - சாலியபுர கஜபா ரெஜிமென்ட் தலைமையகத்தில் இடம்பெற்ற அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து பேசிய ஜனாதிபதி;

முப்படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் மன உறுதியை அதிகரிக்கச் செய்து, அவர்களுக்கான உத்தியோகபூர்வ அதிகாரங்களை முறையாக வழங்கி, தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்க, கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மீண்டும் நாட்டுக்குள் பயங்கரவாதமோ அல்லது மதத் தீவிரவாதச் செயற்பாடுகளோ ஏற்படாத வகையில் நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, அவர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றனர்.

கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக இந்நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இருப்பினும், குறிப்பிட்ட காலப் பகுதிக்குள், பொதுமக்களுக்காகப் பாரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## பயப்படாதீர்கள்; இந்தியாவுக்கு ஆறுதல்

இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து இலங்கை அக்கறையின்றி இருப்பது குறித்து இந்தியாவில் காணப்படும் கரிசனைகளிற்கு மத்தியில் இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தாமதமாவதற்கு வெளிக்காரணிகள் காரணமில்லை என மிலிந்த மொராகொட தெரிவித்துள்ளார் என டைம்ஸ் ஒவ் இந்தியா தெரிவித்துள்ளது.

சீனாவின் முதலீட்டு காலடி தடங்கள் இலங்கையில் காணப்படுகின்ற அதேவேளை, இந்தியாவின் நலன்களிற்கு பாதுகாப்பை ஏற்படுத்தும் விதத்தில் சீனாவின் நடவடிக்கை பாதுகாப்பு விவகாரங்கள் வரை விரிவடையவில்லை என மிலிந்த மொராகொட தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தாமதமாவதற்கு எந்த தீய நோக்கங்களும் காரணமில்லை என நாங்கள் கருதுகின்றோம் என குறிப்பிட்டுள்ள மிலிந்த மொரகொட, எங்களுக்கு என அதிகாரிகள் அமைப்பு அரசியல் ஆகியன உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனுடன் தொடர்புபட்ட விடயம் அதிகாரிகள் மட்ட தாமதங்கள் குறித்து ஜனாதிபதி பொறுமையிழந்துள்ளார். இவற்றிற்கு தீர்வை காண்கின்றோம் எனவும் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

## திசர பெரேராவின் பந்தை எதிர்கொண்ட

மைதானம் திறக்கப்பட்ட பின்னர், கிரிக்கெட் வீரர் திசர பெரேராவின் பந்தை ஜனாதிபதி எதிர்கொண்டார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் கிரிக்கெட் வீரர் அஜந்த மெண்டிஸூம் கலந்து கொண்டார்.




## மட்டு மாநகரசபையில் இடம்பெற்றுள்ள குழப்பம் கூட்டமைப்பின்

தி.சரவணபவன் தெரிவித்தார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சட்டத்தை ஒரு அதிகாரி மீறியிருக்கின்றார், குற்றவியல் வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்டும் உள்ளார். ஆனால் அவருக்கெதிராக கிழக்கு ஆளுநர், பிரதம செயலாளர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் குழப்ப நிலைமை தொடர்பில் தெளிவூட்டும் முகமாக

இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாநகரசபையில் நூற்றுஐம்பதிற்கும் மேற்பட்ட தற்காலிக ஊழியர்கள் இருக்கின்றார்கள். இவர்களது நியமனங்களை நாங்கள் புதுப்பிக்கும் போது அந்த உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையாளரின் பரிந்துரை, மற்றம் மாநகர முதல்வரின் அனுமதி கிடைத்ததன் பின்னர் தான் அவர்களுக்கு மீள நியமனம் வழங்க முடியும் என்ற தெளிடன சபைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

ஆனால் சபையின் தீர்மானத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ளாமல் ஆணையாளரால் வேலை நீடிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. இது மாநகரசபையின் தீர்மானத்தையும், சட்டத்தையும் மீறிய செயலாகும். மாநகர ஆணையாளர் 1%0 (3)ன் பிரகாரம் மாநகரசபைத் தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்பட முடியாது. 1%%ன் கீழ் நியமனத்தை வழங்கலாம் ஆனால் சபைத் தீர்மானத்தைத் தழுவியே வழங்கப்பட வேண்டும். பிழையான முறையில் நியமனங்களை வழங்கினால் அதற்கு சபையோ, முதல்வரோ பொறுப்பாக மாட்டார்கள்.

மாநகர ஆணயாளர் தற்துணிவில் அவருக்கு அந்த நியமனத்தை வழங்கினால் அதற்கு அவரே பொறுப்புக் கூற வேண்டும். அவ்வாறு பிழையான நியமனம் வழங்கப்பட்டது. ஆனால், சம்பளத்திற்கு எங்கள் அனுமதிக்காக வரும் போது தான் எங்களால் அவ்விடயம் அவதானிக்கப்பட்டது. நியமனம் எங்களால் சிபாரிசு செய்யப்படாத ஒருவருக்கு சட்ட விரோதமாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சட்ட விரோதமாக நியமனம் வழங்கப்பட்டமை பற்றியும், அதனால் எற்பட்ட பிரச்சனைகள் பற்றியும் நாங்கள் தெளிவாக உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றோம்.

உள்ளூராட்சி ஆணையாளருக்கு இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தியிருக்கின்றோம் அத்துடன் இவருக்கான அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக பிரதம செயலாளர் மற்றும் ஆளுநருக்கும் கடிதம் இட்டுள்ளோம். இவர்கள் இருவரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் உள்ளூரர்டசி ஆணையாளர் உரிய தரப்பினரிடம் தெளிவாக விளக்கம் கோரியுள்ளதோடு பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டிருக்கின்றார்.

உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்திற்கு மாநகர ஆணையாளர் உரிய ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக எனக்குப் பிரதியிட்டு உள்ளூராட்சி ஆணையாளருக்குப் பதில் எழுதியுள்ளார். ஆனால் இன்றுடன் ஐந்து நாட்களாகப் போய்விட்டது. இன்னும் அவர் அந்த ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்கவில்லை.

இதற்கிடையில் வாகனப் பகுதியில் இருந்த வாகனங்களின் திறப்புகள் களவாடப்பட்டுள்ளன. இது தொடர்பில் வேலைப்பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள பொறியியலாளருக்கு உடனடியாக உரியவர்களுக்கு எதிராகப் பொலிஸ் முறைப்பாடு செய்து விசசாரணைக்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கடிதம் அனுப்பினேன். ஆனால் இன்றுவரை அவ்வாறு பொலிஸல் முறைப்பாடு செய்யப்படவில்லை.

எனவே முறையற்ற விதத்தில் கொடுக்கப்பட்ட நியமனம் மீளப்பெறப்பட வேண்டும். அந்த ஊழியார் கடமை புரிந்த ஒருமாதகால சம்பளத்தை எவ்வாறு கொடுப்பது என்பது பற்றி எதிர்வரும் சபையில் முடிவெடுக்கலாம்.

குறிப்பிட்ட நபர் தவிர்ந்த அனைவரும் வேலைக்கு அனுப்பப்பட வேண்டும், வேலைகளில் எவ்வித தாமதமும் இருக்கக்கூடாது என்பதை எமது மாநகர ஆணையாளருக்கு உள்ளூராட்சி ஆணையாளரால் தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் அனைத்து அறிவுறுத்தல்களும் உதாசீனம் செய்யப்படுகின்றன.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவருடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது. எனவே மாநகர சபையின் செயற்பாடுகள் சுமூகமாக நடைபெறுவதற்கு ஆணையாளர் தன்னால் விடப்பட்ட பிழைகளைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

நியமனம் நீடிக்கப்படாமல் விடப்பட்ட ஊழியருக்கு எதிராக பல்வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகள் இருக்கின்றன. அதற்கான விசாரணைகள் முடியும்வரை அவருகக்குரிய நியமன நீடிப்பு எங்களால் வழங்க முடியாது.

ஆனால் மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தை மீறி மாநகர முதல்வரின் அனுமதியின் பின்னர் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்ற சபையின் தீர்மானத்தையும் மீறி ஆணையாரால் வழங்கப்பட்ட நியமனத்திற்கு நாங்கள் பொறப்புக் கூற முடியாது.

மாநகரசபையின் தீர்மானத்தின்படி மாநகர ஆணையாளாடமிருந்து அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டு விட்டன. மாநகர சபைத் தீர்மானத்தின் படி மாநகரச சபைக் கட்டளைச் சட்டம் 254ங் ன் அடிப்படையில் அவருக்கு மாநகரசபையின் அறிவிட முடியாமல் இருக்கும் வரிகளை அறவீடு செய்வது, விதியோர வியாபாரங்களைத் தடைசெய்வது போன்ற அதிகாரங்களே உள்ளன.

இதை மீறி செயற்படுகின்ற அனைத்தும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சட்டத்தை மீறுவதாகவே அமையும். இவ்வாறாக அவரால் அத்துமிறிச் செய்யப்பட்ட 2%க்கும் மேற்பட்ட சட்டமீறல்கள் எங்களால் ஆவணப்படுத்தப்பட்டு ஆளுநருக்கும், பிரதம செயலாளருக்கும், உள்ளூராட்சி ஆணையாளருக்கு, உரிய அமைச்சர் மற்றும் பொதுநிர்வாக ஆணையர் என அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையின் சட்டம் மீறப்பட்டதற்கு எதிராக இன்னும் இவர்களால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக எமது பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள் அன்று பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டியிருந்தார்.

முழு இலங்கைக்கும் ஒரே சட்டம் தான் ஆனால் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் நிருவாகத்திற்குப் பொறுப்பானவர்கள். இலங்கையின் சட்டத்தை ஒரு அதிகாரி மீறும் போது உடனடியாக அதற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் பெப்ரவரி மாதத்திலேயே இவர் இங்கிருந்து அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதுவரையில் அவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் மட்டக்களப்பு மாநகரத்தில் பாரிய பின்னடைவு ஏற்பட்டிருக்கின்றது.

இதன் காரணமாகவே நாங்கள் நீதிமன்றத்தை நாடினோம். நீதிமன்றம் மூலம் மாநகர ஆணையாளரின் செயற்பாடுகளுக்கு எதிராகத் தடியுத்தரவு வழங்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தடையையும் மீறி 8% குற்றங்கள் செய்யப்பட்டதன் பேரில் நாங்கள் நீதிமன்ற அவதூறு வழக்கும் தாக்கல் செய்தோம். நீதிமன்ற அவதூறு வழக்கில் பத்து லெட்சம் ரூபா சரீரப்பிணையில் வந்திருக்கின்றார். ஒரு குற்றவியல் வழக்கின கீழ் பிணையில் இவர் விடுவிக்கபப்ட்டமையால் நிருவாகக் கோவையின் படி அவரின் பணி இடைநிறுத்தப்பட்டு ஒழுக்காற்று நவடிக்கைக்குச் சென்றிருக்க வேண்டும். ஆனால் அதுவும் இன்னமும் செய்யப்படவில்லை. எனவே இந்த விடயம் பிழையான வழியில் நிருவாகத்தைக் கொண்டு செல்வதை ஊக்குவிப்பதாகவே என்னால் உணர முடிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மாநகரசபையின் நடவடிக்கைகளைக் குழப்புவதும், அதன் மூலமான அபிவிருத்தியினைத் தடைப்படுத்துவதுமே

## கல்முனை மாநகர சபையில் ஊழலா?

தெரிவிக்கும் குற்றச்சாட்டை தான் அடியோடு மறுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது விடயமாக முதல்வர் ஏ.எம்.றகீப் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கல்முனை மாநகர சபையில், மாநகர ஆணையாளரும் கணக்காளரும் ஊழல் செய்வதாகவும் கல்முனை மாநகர சபையினால் சாய்ந்தமருதுக்கு எவ்வித சேவைகளும் வழங்கப்படுவதில்லை என்றும் இப்புறக்கணிப்பினால்தான் சாய்ந்தமருது தனியான நகர சபைக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறது எனவும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் ஊடகமொன்றில் கூறியிருக்கிறார்.

கல்முனை மாநகர சபையில் ஊழல் இடம்பெறுமாயின் அதற்கான ஆதாரங்களோடு சகோதரர் ஜெமீல் அதனை நிரூபித்தால், சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கையை மேற்கொண்டு, அவர்களுக்கு எந்தத் தணடனையையும் பெற்றுக் கொடுப்பதற்கு மேயராகிய நான் தயாராகவே இருக்கின்றேன்.

கல்முனை மாநகர சபையின் வரவு செலவு உள்ளிட்ட அனைத்து நிதி சம்மந்தப்பட்ட விடயங்களும் தற்போது கணனிமயப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு 10 ரூபாவையேனும் எவராலும் கையாடல் செய்ய முடியாதவாறே தற்போது எமது மாநகர சபையின் நிதிக்கட்டமைப்பு ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது.

மேலும், கல்முனை மாநகர சபையின் சேவை வழங்கலை பொறுத்தவரையில் ஏனைய ஊர்களைப் போன்றே, சாய்ந்தமருது பிரதேசத்திற்கும் உரிய சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக கடந்த காலங்களை விட எனது ஆட்சி நிர்வாகத்தில் மாநகர சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற திண்மக்கழிவகற்றல் சேவையை சாய்ந்தமருது பிரதேசத்திலும் எவ்வித குறையுமில்லாமல், மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றோம். இச்சேவை தொடர்பில் இப்பிரதேச மக்கள் தமது திருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஒரு மாநகர சபையினால் ஒரு பிரதேசத்திற்கு எந்தெந்த சேவைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமோ அவை அனைத்தும் சாய்ந்தமருது பிரதேசத்திற்கும் எவ்வித குறைபாடுமின்றி சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் ஆணித்தரமாக கூறி வைக்க விரும்புகின்றேன்.

உண்மை இவ்வாறிருக்க,கல்முனை மாநகர சபையினால் சாய்ந்தமருது புறக்கணிக்கப்படுகிறது என்ற ஜெமீலின் குற்றச்சாட்டு குறித்து நான் மிகவும் வருத்தமடைகின்றேன். சாய்ந்தமருது நகர சபை கோரிக்கை என்பது நான் முதலவாரான பின்னர் உருவான கோஷமல்ல என்பதும் அது மிக நீண்ட காலமாக இருந்து வந்த கோஷம் என்பதையும் எல்லோரும் அறிவார்கள்.

மேலும், எமது கட்சியின் தலைவரான ரவூப் ஹக்கீம் மீது சகோதரர் ஜெமீல் தெரிவிக்கும் கருத்துக்களும் ஏற்புடையதல்ல. எமது முஸ்லிம் சமூகத்திற்கு தலைமை வகிக்கக்கூடிய ஆற்றல், ஆளுமை, அனுபவம் எல்லாமே தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களிடம் வெகுவாக இருப்பதை எவரும் மறுதலிக்க முடியாது என மேயர் ஏ.எம்.றகீப் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் கையை முறுக்கிதான்

மட்டக்களப்பு பெரியகல்லாறு பொது விளையாட்டு மைதானத்தினுள் கடினபந்து விளையாடுவது தொடர்பில் எழுந்த பிரச்சனைக்குத் தீர்வுகாணும் முகமாக ஞாயிற்றுக் கிழமை மாலை பெரியகல்லாறுக்கு விஜயம் செய்து அங்குள்ள விளையாட்டுக் கழகங்களுடன் கலந்துரையாடி விட்டு ஊடகங்களுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்;

கிழக்கு மாகாணத்தைப் பெறுத்தவரையில் இன விகிதாசார அடிப்படையில் தமிழர் மாத்திரமல்ல எந்த ஒரு இனத்தவரும் தனித்து நின்று அந்த இனம் சார்ந்து முதலமைச்சரைப் பெற்றுக்காள்ள முடியாத நிலைதான் இருக்கின்றது. மாகாணசபைத் தேர்தல் வரும்போது அதற்குரிய வியூகங்களை அமைத்து ஒரு தமிழ் நபர் ஒருவரை கிழக்கு மாகாண முதலமைச்சராக கொண்டு வரவேண்டும் என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு.

இந்நிலையில மாகாணசபை தேர்தல் அறிவிக்கப்படாமலேயே இவர்தான் அல்லது அவர்தான் முதலமைச்சர் வேட்பாளர் என கூறுவது பக்குவமடைந்த அரசியல்வாதிகள் கூறும் கருத்தல்ல. கூட்டமைப்புக்கென்று தர்மம் உள்ளது. அதற்கு ஒரு ஒருங்கிணைப்புக்குழு உள்ளது. அந்த ஒருங்கிணைப்புக்குழு கூடி கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதை தெரிவிக்கும்

எந்தெந்த அதிகாரங்கள் 13 வது திருத்தச் சட்டத்தினூடாக மாகாணசபைக்கு வழங்கப்பட்டதோ, அந்த அந்த அதிகாரங்கள் அனைத்தும் வழங்கி மாகாணசபைத் தேர்தலை நடாத்த வேண்டும் என்பது எமது உறுதியான நிலைப்பாடு. ஏனெனில் அனைத்து அதிகாரங்களையும் பறித்துவிட்டு வெறும் கோது ஆக மாகாணசபையை நடாத்துவதென்பது அது முடியாத காரியம்

மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பது எமது உறுதியான நிலைப்பாடு. ஏனெனில் அனைத்து அதிகாரங்களையும் பறித்துவிட்டு வெறும் கோது ஆக மாகாணசபையை நடத்துவதென்பது அது முடியாத காரியம்.

எனவே 2009இலே போராட்டம் முடிவுக்கு வரும் போது அப்போதைய ஜனாதிபதி இந்தியாவிடமும் சர்வதேசத்திடம் 13 வது திருத்தச்சட்டம் தமிழ் மக்களின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் போதாது 13 பிளஸ் பிளஸ் நான் கொடுப்பேன் என கூறியிருந்தார். தற்போது அந்த 13 பிளஸ் பிளஸாக இல்லாமல் 13 மைனஸ் மைனஸாக இருக்கின்றது. தமிழ் மக்கள்கூட 13 வது திருத்தச் சட்டத்தை ஒரு நிரந்தரத் தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்தும் இந்த மாகாண சபை முறைமையை இனப்பிரச்சனைக்கு ஒரு ஆரம்ப புள்ளியாக ஏற்றுக் கொள்வோம் என்ற அடிப்படையில் நாங்கள் ஏற்றிருந்தோம்.

அந்த வகையில் மாகாணசபைக்கு அது உருவாகும் போது உள்ளடக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களும் உள்ளடக்கப்பட்டு மாகாணசபைத் தேர்தல் மிகவிரைவாக நடக்க வேண்டும். இல்லையேல் ஜனாதிபதியின் பிரதிநிதிகளாகவுள்ள ஆளுனர்கள் குட்டி ஜனாதிபதிகளாக மாகாணத்தை ஆண்டு கொண்டிருப்பது மட்டுமல்லமல் மாகாணத்தின் வளங்களை அழிப்பவர்களாக இருக்கின்றார்கள். இந்த நிலை தொடர்ந்தால் மாகாணத்தையே கூறுபோட்டு விற்று விடுவார்கள்.

2015 ஆம் ஆண்டிலே இந்த நாட்டிலே நல்லாட்சி என்று சொல்லப்பட்டது ஆனால் அது நல்லாட்சி அல்ல. அவர்களின் ஆட்சிமாற்றத்தினூடாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பெருமனதுடன் கிழக்கில் ஒரு முஸ்லிம் நபரை முதலமைச்சராக்கியது. அந்த வகையில் நாங்கள் புதிதாக வியூகங்களை அமைத்து பேசக்கூடியவர்களுடன்பேசி தமிழ் மகன் ஒருவரை கிழக்கில் முதலமைச்சராக கொண்டு வரவேண்டும் என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் ஒற்றுமையில்லை என்பது ஒரு வெளிப்படையான உண்மை. அது வெளியுலகிற்குத் தெரிந்து கொண்டிருக்கின்றது. அந்த ஒற்றுமையீனம் நீங்க வேண்டும் என்பது தமிழீழ விடுதலை இயக்கத்தின்(ரெலோ) எண்ணப்பாடு அதன் பிரகாரம். நாங்கள் சில ஒற்றுமை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கள் தற்போது 3 கட்சிகள்தான் இருக்கின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து தமிழ் தேசியக் பரப்பிலே இருக்கின்ற கட்சிகளையும் ஒற்றுமைப்படுத்தி நாங்கள் ஒரு கூட்டாக 2001 ஆண்டு எவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பலமாக இருந்ததோ அவ்வாறு பலமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருக்க வேண்டும் என்பது எமது எண்ணம் என்றார்.

# நாட்டின் வளங்களை கொள்ளையடிக்கவே நாடு சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது

## தே.கா.தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா எம்.பி

(நூருல் ஹுதா உமர்)

இந்த நாடு உலகில் உள்ள பலருக்கும் தேவைப்பட்டதனால் பல காலங்கள் யுத்த ரீதியாக அடிமைப் படுத்தி பின்னர் மீண்டுபோனாலும் கூட தொடர்ந்தும் காலாகாலமாக பல பிரச்சினைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் என்ற பெயரிலும் இன்னும் எத்தனையோ பெயர்களை கொண்ட ஆயுதக்குழுக்களின் பெயரிலும் நடத்தப்பட்ட யுத்தம் விடுதலைக்கான யுத்தமல்ல. இதுவிடயம் தொடர்பில் பேச யாராவது தயாராக இருந்தால் அவர்களுக்கு முகம் கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம். இன்றும் முஸ்லிங்களே கறிவேப்பிலையாக பயன்படுத்தப்பட்டுள்ளார்கள். கிறிஸ்தவ தேவாலயத்தில் குண்டுவீச முஸ்லிம் உலமா என்ற பெயரில் அவர்கள் பாவிக்கப்பட்டு முஸ்லிங்கள் மீது பயங்கரவாதிகள் எனும் முத்திரை குத்தப்பட்டிருப்பதும் இந்த நாட்டின் சொத்துக்களையும், வளங்களையும் கொள்ளையடிக்



கவே தவிர வேறில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளாமல் இருக்க முடியாது என தேசிய காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு 29 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சர்வதேச ஆசிரியர் தினத்தன்று கல்லூரியின் 'அதாஉல்லா கேட்போர் மண்டபத்தில்' தேசிய பாடசாலை தின விழா கொண்டாடப்பட்ட போது அந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கல்வியில் மிகமுக்கியமான கல்வி நாம் ஏன் படைக்கப்பட்டோம் என்பதை அறிந்துகொள்ளும் கல்வியே. இன்றைய காலங்களில் நாம் என்ன பட்டங்களை, பதவிகளை பெற்றாலும் மனங்கள் தூய்மையாக்கப்படாமல், எண்ணங்கள் சீராக இல்லாமல் இளைஞர்கள் வெவ்வேறு திசைகளில் திசைமாற்றப்பட்டு வருகிறார்கள். உலமா என்ற பெயரில் ஸஹ்ரான் பாவிக்கப்பட்டிருக்கிறார். வரலாறுகளை பின்னோக்கி பார்க்கின்ற போது இந்த நாடு அழகும், செழிப்பும் நிறைந்த நாடு. இந்த நாட்டில் தான் இஸ்லாமியர்கள் நம்பும் நபி ஆதம் (அலை) இறக்கப்பட்டார். இந்த மண் வரலாற்றில் மறக்கமுடியாத வளங்களையும், பண்புகளையும் கொண்ட மண்.

காய்த்த மரத்திற்கே கல்லெறி என்பதுபோல இந்த நாடு வளங்களினால் காய்த்த மரம். இந்த நாட்டில் உள்ள வளம் வேறு நாடுகளில் காணமுடியாது. சொர்க்கபுரியாக திகழும் எமது நாட்டில் மற்றவர்கள் கண் வைப்பதில் நியாயம் இருக்கிறது. உலகின் முக்கிய அமைவிடங்களில் ஒன்றாக இலங்கை இருக்கிறது. சிங்களவர்களில் சிலரும் பணத்திற்காக ஆயுதக்குழுக்களுக்கு ஒத்துழைத்தவர்களும் இல்லாமல் இல்லை.

இந்த நாட்டின் சொத்துக்களை கபளீகரம் செய்வோர்கள் செய்யும் சதிகளில் முஸ்லிம் இளைஞர்கள் சிக்கிக்கொள்ளாமல் காப்பாற்றும் பணியை பாடசாலைகள், பெற்றோர்கள், கல்விமான்கள், கல்வியதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும். இந்த நாட்டில் ஏன் குண்டுகள் வெடித்தது. ஏன் கிறிஸ்தவ தேவாலயங்களில் வெடித்தது. முஸ்லிங்கள் என்ற பெயரில் ஏன் வெடிக்கச் செய்யப்பட்டது என்பதை நாங்கள் ஆழமாக சிந்திக்க வேண்டும். நாட்டின் வளங்களும், சொத்துக்களும் மிக அவதானமாக பாதுகாப்படவேண்டியவையாக நாம் காண்கிறோம் என்றார்.

# கிழக்கு நவராத்திரிவிழாவின் 3 ஆம் நாள் பூஜை!







(வி.ரி.சகாதேவராஜா)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலகமும், சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடாத்தும் நவராத்திரி விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் திருக்கோவில் பிரதேசசெயலக உதவி பிரதேசசெயலாளர் க.சதிசேகரன் தலைமையில் இடம்பெற்றது.

அறநெறிபாடசாலை மாணவர்களின்ஓங்காரம்,அஸ்ரோத்திரம்,பஜனை,பூசை நிகழ்வு மற்றும் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன.

சிறப்புசொற்பொழிவினை ஆசிரிய ஆலோசகர் எஸ். லக்குணம் நிகழ்த்தினார். மற்றும் இந்து சமய கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ,மன்ற உறுப்பினா்கள் கலந்துகொண்டனர்.

மேடையில், கலை நிகழ்ச்சியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

# மனநோயாளர்கள் வைத்திசயாலையில் சிகிச்சை பெறுவதற்கு பல தடைகள் இருக்கின்றன - வைத்தியர் டான்

(ரக்ஸனா )

வருடாந்தம் ஒக்டோபர் 10ஆம் திகதி மனநல தினம் அனுஸ்ட்டிப்பப்பட்டு வருப்படுகின்றது. சமத்துவம் அற்ற உலகில் மக்களின் மன நிலையைப் பாதுகாப்பது எவ்வாறு என்ற தொணிப் பொருளில் இம்முறை மன நல தினம் அனுஸ்ட்டிக்கப்படுகின்றது.

இன, மொழி, போன்றவற்றால் நாட்டில் மாத்திரமல்லமல் உலகளாவிய ரீதியிலும் பிரச்சனைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற. மனித உரிமைகள், பாலியல் வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்ற மக்களுக்கும், மனநலம் குறைந்த மக்களுக்கும் உரிமைகள் பல மறுக்கப்பட்டிருப்பதனாலும், மனநல பாதிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவைகளைக் குறைக்க வேண்டும் என்பதுதான் இவ்வருடத்திற்குரிய கருப்பொருளாகவுள்ளது. மட்டக்களப்பு மாவட்டம் என ஏறாவூர் வைத்தியசாலையின் மனநல வைத்தியர் டான் செளந்தரராசஜா தெரிவிக்கின்றர். ஒக்டோபர் 10 அனுஸ்ட்டிக்கப்படும் சர்வதேச மனநல தினத்தையொட்டி அவர் ஏறாவூர் வைத்தியசாலையில் வைத்து ஞாயிற்றுக் கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

எமது அலகை 2018 ஆம் ஆண்டிலிருந்து சிறிது சிறிதாக விருத்தியடைய வைத்துள்ளோம். சிறுவர்களுக்கான மனநல சிகிச்சைகளையும் நாத்தி வருகின்றோம். மேலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், குடும்ப வன்முறைகள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், சிறுவர் உரிமைகள் போன்ற விடையங்களையும் எமது வைத்தியசாலையில் ஆரம்பித்து வைத்துள்ளோம்.

மனநோயாளர்கள் வைத்திசயாலையில் சிகிச்சை பெறுவதற்கு பல தடைகள் இருக்கின்றன. மக்களின் பிளையான எண்ணக்கருக்கள், பேய் பிசாசு, அற்கோள் பவனை, அது ஒரு இழிவான நோய், போன்ற தவறான எண்



ணங்களால் மக்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்கின்றார்களில்லை. இதனை நாம் மக்களிடத்திலும், பாடசாலை மட்டத்திலும் விழிப்புணர்வுகளை மேற்கொண்டு இந்த நோயை அறிந்தவர்கள், வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்குக் கொண்டு வருவதன் மூலம், இரண்டு வாரங்களில் சிகிச்சை பெற்று வீடு செல்லலாம் என்பதை தெழிவு படுத்தி வருகின்றோம். தற்போது இங்கு சிகிச்சை பெற்ற நோயாயர்கள் சுகமடைந்ததும் அவர்கள் அடையாளம் கணும் மேலும் மனநலம் பாதிக்கப்பட்ட வேறு நபர்களை அழைத்துக் கொண்டு வருகின்றார்கள்.

தற்போதைய கொவிட் காலத்தில் சிறந்த சூழலில் சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்கிணங்க நாம் செயற்பட்டு வருகின்றோம். மீன் வளர்ப்பு தொட்டி, தையல் இயந்திரம், தொலைக்காட்சி பார்த்தல், எந்த நேரமும் அவர்களுக்கு விரும்பி உணவுளைத்தயார் செய்து கொள்வதங்குரிய வசதிகள், விளையாட்டு உபகரணங்கள், குடும்பத்தினருடன் அமர்ந்து கதைப்பதற்கு ஏதுவான வசதிக வாய்ப்புக்களையும் செய்து வைத்திருக்கின்றோம்.

சில நோயாளிகளை வந்தவுடனேயே கட்டுப்படுத்துவதற்கு மிகவும் கடினமாக இருக்கும். அவர்களைக் கவனிக்க விசேட அறை வசதிகளும் உள்ளன. அனைத்து நோயாளர்களும், எமது உத்தியோகஸ்த்தர்கள் மூலம் நேரடியாக கண்காணிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றார்கள் எந்த நேரமும் எம்மைத் தொடர்பு கொள்வதற்குரிய தொலைபேசி இலக்கமும் வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரித்தார்.

# பொருட்களின் விலை உயர்வைக்கூட இந்த அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை இராதாகிருஷ்ணன் கருத்து

(க.கிஷாந்தன்)

'பொருட்களின் விலை உயர்வைக்கூட இந்த அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை. இறக்குமதியாளர்களும், உற்பத்தியாளர்களும் விலையை தீர்மானிக்கும் நிலைமை உருவாகியுள்ளது. அப்படியானால் அரசாங்கம் எதற்கு, அமைச்சரவை எதற்கு' என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நுவரெலியா, தலவாக்கலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

' மாகாணசபைகளுக்கான தேர்தல் பழைய முறைமையிலேயே நடத்தப்படும் என பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அரசாங்கம் அறிவித்துள்ளது. தேர்தல் என்பது ஜனநாயக அம்சம். எனவே, தேர்தல் நடைபெறுவதை நாம் வரவேற்கின்றோம். ஆதரவையும் வழங்குவோம்.

இந்தியாவின் அழுத்தத்



தாலேயே தேர்தல் நடத்தப்படுகின்றது. ஆனாலும் அவ்வாறு இல்லை என வெளிவிவகார அமைச்சர் கூறுகின்றார். எம்மை பொறுத்தமட்டில் சர்வதேச அழுத்தத்தாலேயே தேர்தலுக்கான ஏற்பாடு இடம்பெற்று வருகின்றது.

அதேவேளை, முன்னரெல்லாம் வரவு செலவுத் திட்டம்வரும்போதுதான் பொருட்களின் விலை மறுசீரமைக்கப்படும். ஆனால் இன்று நாளாந்தம் அதிகரிப்பு இடம்பெறுகின்றது. இறக்குமதியாளர்களும், உற்பத்தியாளர்களுமே விலையை நிர்ணயிக்கின்றனர். அப்படியானால் அரசாங்கம், அமைச்சரவை எதற்கு' என்றார்.

# இன்று இனவாதம் பேசினால் அந்த இனமே அவரை ஒதுக்குகின்ற நிலை





(சகா)

இன்று இனவாதம் பேசினால் அவர் சார்ந்த அந்த இனமே அவரை ஒதுக்கிதள்ளுகின்ற நிலை வந்துள்ளது. அடிமட்ட மூவினமக்களும் நாட்டில் ஒன்றாகவே வாழவிரும்புகிறார்கள் என்பதே அதன் அர்த்தம். அன்பினால் செய்யப்படும் காரியங்கள் அனைத்தும் ஆனந்தத்தைத்தரும். உங்களை வாழ்த்துகிறேன்.

இவ்வாறு மாளிகைக்காடு முஸ்லிம்கள் மத்தியில் உரையாற்றிய காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

காரைதீவுக்குட்பட்ட ,மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு மாளிகைக்காடு மொத்த மீன் வியாபார வர்த்தக சங்கத்தின் அனுசரணையோடு ,கொரோனா நோயிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான விழிப்புணர்வு பதாதைதிறக்கும் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

அந்நிகழ்வில் பிரதமஅதிதியாக கலந்துகொண்டுரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்நிகழ்வு மாளிகைக்காடு அந்நூர் கலாச்சார மண்டபத்திலுள்ள அமைப்பின் காரியாலயத்தில் தலைவர் எம்.இம்தியாஸ் தலைமையில் நேற்று நடைபெற்றது. முன்னதாக அந்நூர் ஜூம்ஆப் பள்ளிவாசலுக்கு முன் கொரோனா ஒழிப்பு பதாகையை திரைநீக்கம் செய்ததுடன் நூர் பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி மஜீட்டின் துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதமஅதிதியாக காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கே.ஜெயசிறில் ,விசேடஅதிதிகளாக மாளிகைக்காடு மொத்த மீன் வியாபார வர்த்தக சங்கத் தலைவர் எம்.நௌஷாத் ,காரைதீவு பொலிஸ் நிலையப் பிரதிநிதி, இசட்.சி.சி அமைப்பின் தலைவர் எம்.எச். நாஸர் ,கிராம உத்தியோகத்தர்கள், உலமாக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு தவிசாளர் ஜெயசிறில் மேலும் உரையாற்றுகையில்:

நான் அரசியல் என்ற சாக்கடைக்குள் சுத்தம் செய்ய இறங்கியவனே தவிர குப்பைகொட்ட அல்ல . நான் அரசியலுக்குவரமுன்பே இப்பிராந்தியமெங்கும் எனது தொழிலால் நன்கு அறியப்பட்டவன்.மாளிகைக்காட்டில் நிறைய நண்பர்கள் எனக்குள்ளனர்.

சிலர் தமது அரசியலை வளர்ப்பதற்காக என்மீது அபாண்டமான பழியையும் குற்றசாட்டுகளையும் சொல்லி சேறுபூச புறப்பட்டார்கள்.ஆனால் பள்ளிவாசல் சம்மேளனம் பள்ளியில் இருந்தவர்கள் கண்ணியமாகசெயற்பட்டு அக்களங்கத்தை போக்கினார்கள். அறிக்கைவிட்டவர்களும் முகநூல்போராளிகளும் ஏமாந்தனர். நான் என்றும் மதத்தையும் இனத்தையும் மதிக்கின்றவன். இருஇனங்கள் வாழ்கின்ற எமது சபையை மிகவும் கண்ணியமாக கவனமாக நடாத்திவருகிறேன். என்னையறிந்த அனைவருக்கும் தெரியும்.வேண்டுமென்றே சேறுபூசவிளைகின்றவர்களுக்கு என்னால் பதிலளிக்கமுடியாது.

வீட்டிலிருந்துகொண்டே பாராளுமன்ற உறுப்பினராக தொடந்துவரும் எமது தலைவர் சம்பந்தன் இனவாதமற்றவர். அவர்வழிவந்த நாங்களும் அப்படியே. நாம் இனமதம் கடந்து பயணிக்கவேண்டும். மாளிகைக்காடு மயானம் கடலரிப்பால் காவுகொள்ளப்பட்டவேளை நான் களத்தில் நின்றதை நீங்கள் அறிவீர்கள். என்னிடம் இனவாதமில்லை.

தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஏதாவது முரண்பாடுகள் வரும்போது வட்டமேசையில் இருந்து பேசித்தீர்த்துக்கொள்ளவேண்டும். அதைவிடுத்து அறிக்கைகளும் முகநூலும் ஒருபோதும் இனஉறவைக்கொண்டுவராது. இருஇனங்களும் சந்தேகம் வராதபடி அனைவரும் நடந்துகொள்ளவேண்டும்.

உன்னதமான இறுதிக்கிரியை அதாவது ஜனாசா சேவையைசெய்யும் உங்களுக்கு என்னாலான முழுஉதவியையும் செய்வேன். என்றாடர்.

# உயர்தரத்துக்கு தெரிவாயுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(கமல்)

அதி கஷ்ர பிரதேசமான மட்டக்களப்பு வவுணதீவில் க.பொ.த(சா/த)சித்தியடைந்து உயர்தரத்துக்கு தெரிவாயுள்ள வறுமைக்கோட்டில் வாழ்ந்துவரும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அயர்லாந்திலுள்ள கீநிூநுஅஂ கீஉகூக்கீமீகு இநிூஹுக அமீநு நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இக்கற்றல் உகரணங்கள் மேற்படி நிறுவனத்தின் இலங்கைக்கான சமூக சேவைகளுக்கு பொறுப்பான வின்சன்ட் மகளிர் பாடசாலையின் ஆசிரியர்களினால் வழங்கி வைக்கப்பட்டது.

இவ்வாறான ஏழை மாணவர்களுக்கு பொருட்களை வழங்குவதற்கு கீநிூநுஅஂ கீஉகூக்கீமீகு இநிூஹுக அமீநு இன் தலைமைக் கண்காணிப்பாளராக அயர்லாந்தில் பணிபுரியும் எம்மட்டு மண்ணின் சேர்ந்த அருள்குமரன் மகேந்திரராஜா அவர்களே தனது நிறுவனத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய குறித்த உதவி வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த உதவித்திட்டத்தின் ஊடாக இம்முறை சாதாரண தரத்தில் சித்தியடைந்து உயர் தரத்திற்கு தெரிவாகிய பிரதே





சத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பலருக்கு வழங்கி வைக்கப்பட்டது. தற்போதைய கொவிட் சூழ் நிலையில் வாழ்வாதாரத்தை இழந்து தவித்த நிலையில் தங்களது பிள்ளைகளுக்கு இவ்வாறான உதவி மிகவும் பெறுமதி வாய்ந்ததாகவும் இதனை மேற்கொண்ட நிறுவனத்திற்கும் ஒழுங்கு படுத்தி தந்த மட்டக்களப்பு சமூக பற்றாளன் அருள்குமரன் அவர்களுக்கும்

இதன்போது பெற்றோர்கள் நன்றியைத் தெரிவித்தனர்.




SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான
காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# சோகமயமானது இராகலை ஐவரின் சடலங்களும் அடக்கம் உயிரிழந்தமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை





(க.கிஷாந்தன்)
(கேதீஸ்)

இராகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தில் தீ விபத்தால் உயிரிழந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவரின் இறுதி கிரியைகள் நேற்று இரவு இடம்பெற்றன.

தோட்ட மக்கள் அணிதிரண்டு கண்ணீர் மழ்க இறுதி கிரியைகளில் பங்கேற்று சடலங்களை தோட்ட மயானத்தில் நல்லடக்கம் செய்தனர்.

தோட்ட மைதானத்தில் சடலங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. தோட்டங்களில் உள்ள வீடுகளில் வெள்ளை கொடிகள் பறக்கவிடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. தோட்ட மக்கள் எவரும் இன்று தொழிலுக்கு செல்லவில்லை.

இராகலையில் ஏற்பட்ட தீவிபத்துச் சம்பவத்தில் உடல் கருகிப் பலியோனோரின் சடலங்கள் தொடர்பில் நுவரெலியா சட்ட வைத்திய அதிகாரியால் திறந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன், உடற் கூற்று மாதிரிகளை இராசாயண பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்படவேண்டும் என இன்று மாலை தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனையின் போது, உயிரிழந்தமைக்கான காரணம் கண்டறியப்பட முடியாததால் இந்த திறந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. உயிரிழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரின் சடலங்கள் மீதான பிரேத பரிசோதனைகள் இன்று (09.10.2021) இடம்பெற்றன.

இதன்போதே, நுவரெலியா சட்ட வைத்திய அதிகாரியால் மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இராகலை இலக்கம் (01) தோட்ட பிரிவில் மண்ணால் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக தனி வீடு ஒன்று (07) இரவு பத்து மணியளவில் தீ பிடித்துள்ளது.

இந்த திடீர் தீ விபத்து சம்பவத்தில் இவ் வீட்டில் வசித்து வந்த ஆறு பேரில் இரண்டு சிறுவர்கள் உட்பட ஐவர் தீயில் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர்.

இதன் போது குறித்த சம்பவத்தில் தாய், தந்தை மற்றும் மகள், மகளுடைய ஒரு வயது மற்றும் 12 வயது உடைய இரு ஆண் பிள்ளைகள் என ஐவர் தீயில் எரிந்து சம்பவ வீட்டிலேயே உயிரிழந்துள்ளனர்.

இராமையா தங்கையா (வயது 61), அவரின் மனைவி செவனமுத்து லெட்சுமி (வயது 57), ஆகியோருடன், மகளான தங்கையா நதியா (வயது 34) இவரின் பிள்ளைகளான, சத்தியநாதன் துவாரகன் (13), முதல் கணவரின் பிள்ளை) மற்றும் தற்போதைய தந்தையான மோகன்தாஸ் ஹெரோசன் (வயது 01) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை இராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பிரதமரின் தலைமையில் முத்திரை வெளியீடு

வாஸ் கூஞ்ஞ

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு மூன்று பிரிவுகளின் கீழ் முத்திரைகளை வெளியிடும் நிகழ்வு கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றது.

உலக அஞ்சல் தின முத்திரை நிரந்தர பிரிவின் கீழ் 1000 ரூபாய் பெறுமதியான முத்திரை மற்றும் இலங்கையின் உள்ளூர் பறவைகளை உள்ளடக்கும் வகையிலான முத்திரை தொகுப்பும் வெளியிடப்பட்டது.

வெகுசன ஊடக அமைச்சர் கௌரவ டலஸ் அழகப்பெரும அவர்கள் அதற்கான முதல் நாள் உறை மற்றும் முத்திரையை கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடம் வழங்கினார்.

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட உலக அஞ்சல் தின நினைவு முத்திரை -2021 கொவிட் 19 தொற்று நிலைமைக்கு மத்தியிலும் நமது நாட்டு தபால் சேவை சர்வதேச ரீதியில் செயற்பட்டு வருகின்றமையை பிரதிபலிக்கும் வகையில் புலஸ்தி எதிரிவீர அவர்களினால் வடிகமைக்கப்பட்டுள்ளது.

1000 ரூபாய் பெறுமதியான நிரந்தர வகை முத்திரையானது யாபஹுவ சிங்கத்தை பிரதிபலிக்கும் வகையிலான கைகளினால் வரையப்பட்ட கிராஃபிக் ஓவியமாகும். இசுறு சதுரங்க அவர்களினால் இம்முத்திரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இதுவரை முத்திரைகளின் ஊடாக பிரதிபலிக்கப்படாத உள்ளூர் பறவைகளை சித்தரிக்கும் வகையிலான 6 முத்திரைகளும்இ ஆறு முதல் நாள் உறைகளும் இவ்வாறு இன்றைய தினம் வெளியிடப்பட்ட முத்திரைகளில் உள்ளடங்குகின்றன.

சாம்பல் இருவாய்ச்சி (‘அலு கேதென்னா’), ‘ஹீன் கொட்டோருவா’, ‘வன கொவுலஸ்பெடியா’, ‘புள்ளி வல் அவிச்சியா’, பெரிய பொன்முதுகு மரங்கொத்தி (‘மஹ ரது கெரலா’) மற்றும் ‘பட ரது வெஹிலிஹினியா’ ஆகிய உள்ளூர் பறவைகள் இம்முத்திரைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன. புலஸ்தி எதிரிவீர அவர்களினால் இம்முத்திரை தொகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் ஜகத் க விஜேவீர, தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன, பிரதி தபால்மா அதிபர் (செயற்பாடு) ரஞ்சித் மு ரணசிங்க, பிரதி தபால்மா அதிபர் மேல் மாகாணம்- தெற்கு.சிசிர குமார, முத்திரை பணியகத்தின் பணிப்பாளர் சாந்த குமார மீகம, உள்நாட்டு வருவாய் ஆணையாளர் நாயகம் பண்டார உள்ளிட்ட முத்திரை பணியகத்தின் அதிகாரிகள் கலந்து கொண்டனர் என பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# கிராமத்துடனான கலந்துரையாடல்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிராமத்துடனான கலந்துரையாடல் தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கு அமைய 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை பிரதேச செயலக மட்டத்தில் பெற்றுக் கொள்வதற்கான திருகோணமலை மாவட்டத்தின் முதலாவது நிகழ்வு பதவி சிறீபுர பிரதேச செயலகத்தில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான கபில அத்துகோரல தலைமையில் நடைபெற்றது.

அதிமேதகு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கிராமியப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது .அதன் அடிப்படையில் கிராமிய அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்டு செயல்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது .

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மேலிருந்து பெறப்படுவதற்கு பதிலாக கீழ்மட்டத்தில் இருந்து பெற்றுக் கொண்டு அவற்றை செயற்படுத்துவதற்கான ஒரு ஏற்பாடாக இந்த நிகழ்வு இவ்வாறு மேற்கொள்ளப்பட்டதாகவும் தற்போதைய நிதி அமைச்சர் கிராமிய மக்களின் தேவையறிந்து கிராமியப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் அடிப்படையில் அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளை பெற அறிவுறை வழங்கியதாகவும் இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் வெளிநாட்டு இறக்குமதியை குறைத்து உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து வகையான பொருட்களையும் உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்றை முன்மொழிந்து அவற்றை நடைமுறைப்படுத்தி வருகிறார். இதன் மூலம் வெளிநாட்டுக்கு செலுத்த வேண்டிய அன்னிய செலாவணி அளவு குறைவடையும். மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் அடிப்படையில் பல்வேறு வகையான செயல்திட்டங்கள் கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்மூலம் கிராமிய அபிவிருத்தி துரிதப்படுத்தப்பட்டு கிராமிய மக்களுடைய வாழ்வாதாரம் மேம்படும். உண்மையான அபிவிருத்தி இதனால் ஏற்படும். எனவே பயிர் செய்யக்கூடிய ஒவ்வொரு பிரதேசத்திலும் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலமாக நாட்டை கட்டியெழுப்ப கூடியதாக இருக்கும் என மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவுத்தார்.

அனைவரும் அர்ப்பணிப்புடன் நாட்டு நலன் கருதி செயற்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. நாட்டினுடைய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முயற்சியில் கிராமியப் பொருளாதாரத்தை வலுப்படுத்த தற்போதைய அரசாங்கம் கூடிய அக்கறை கொண்டு செயற்படுகின்றது. ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு 3 மில்லியன் ரூபாவை அரசாங்கம் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ள வழங்க உள்ளது . திருகோணமலை மாவட்டத்திற்கு ஒட்டு மொத்தமாக 1,574 மில்லியன் ரூபா பெறுமதியான நிதி ஒதுக்கீடு கிடைக்க இருக்கின்றது.

மாவட்டத்தினுடைய 230 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அவர்களிடம் இருந்தே முன்மொழிவுகளை பெற்று அவற்றை எதிர்வருகின்ற காலங்களில் ஒன்றன்பின் ஒன்றாக நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். இதன் மூலம் கிராம சேவகர் பிரிவில் இருக்கக்கூடிய கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்களுடைய மக்களுடைய வாழ்வாதாரம் மேம்பட கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாக இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.



இந்நிகழ்வில் பதவி ஸ்ரீபுர உதவி பிரதேச செயலாளர் , பிரதேச சபை தவிசாளர் , அரச உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இவ் வேலை திட்டத்தின் இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவிலும் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா கோமரங்கடவெலயில் பொதுச் சந்தை திறந்து வைப்பு

(இஃஜாஸ் ஏ பரீட்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கோமரங்கடவெலப் பகுதியில் மக்கள் நலன் கருதி புதிய பொது சந்தையொன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இதனை நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா , மற்றும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கபில நுவான் கோரள ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை கோமரங்கடவெல பகுதி பிரதேச மக்களுக்காக ஒரு பொதுச் சந்தை திறந்து வைக்கப்படுவதன் மூலம் அம் மக்களிகன் நீண்டகாலத் தேவை இதன் மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது.

கோமரன்கடவெல பிரதேச சபையின் தவிசாளர் சந்தன விஜித குமார மற்றும் கோமரன்கடவெல பிரதே மக்களும், வணிக சமூகத்தினரும், பாராளுமன்ற உறுப்பினரிடம்கேட்டுக் கொண்டதற்கிணங்க மிகவும் குறுகிய காலத்தினுள் இச்சந்தைக்கட்டிடம் முடிவடைந்தது திறந்து வைக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கோரள அவர்கள் தெரிவித்தார்.

இதற்கு ஒத்ழைப்பு வழங்கிய நகர்ப்புற மேம்பாட்டு ஆணையத்தின் அனைத்து அதிகாரிகளுக்கும் கட்டுமானப் பணிகளை முடித்ததற்கு நன்றி தெரிவித்தார்.



இந் நிகழ்வில் கோமரங்கடவெல பிரதேச சபையின் தவிசாளர் சந்தன விஜித குமார, மொரவெவ பிரதேச சபையின் தவிசாளர் ஜகத் வெரகொட, தம்பலகாமம் பிரதேச சபையின் தவிசாளர் ஏ.ஜி. சம்பிக பண்டார மற்றும் பதவி ஸ்ரீ புர பிரதேச சபையின் தவிசாளர்

திருச்சபை நகரம் மற்றும் கடவத்த பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஏனைய உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

# திருகோணமலை நகரசபை பொது நூலகத்தில் சேதனப் பசளை தயாரித்தல் ஆரம்பம்

(அ . அச்சுதன்)

சேதனப் பசளை தயாரிக்கும் திட்டம் திருகோணமலை நகரசபையின் ஏற்பாட்டில் திருகோணமலை பொது நூலக வளாகத்தில் நகரசபையின் செயலாளர் தே. ஜெயவிஸ்ட்ணு தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ச. தீபராஜ், பொது நூலகத்தின் பிரதம நூலகர் க. வரதகுமார், நூலக உதவியாளர் அ.அச்சுதன், ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# சேதனை பசளையை பாவித்து பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் விவசாயிகள்



(ந.குகதர்சன்)

ஜனாதிபதியின்சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சேதனை பசளையை பாவித்து பயிர்ச்செய்கைநடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

நச்சுத்தன்மையற்ற நாடு எனும் ஜனாதிபதியின் விஷேட வேலைத் திட்டத்தினை ஜனாதிபதி செயலகம்,விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து நஞ்சற்ற உணவு உற்பத்தியினைஊக்குவிக்கும் பல்வேறு வேலைத் திட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வருகின்றது.

ஜனாதிபதியின்இவ் வேலைத்திட்டத்திற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர்பிரிவில் காகிதநகர் பகுதியில் மக்கா பாமினை நடாத்தி வரும் ஐ.ரி.முஹமட் என்பவர் இயற்கை உரத்தை பயன்படுத்தி தனதுபாமில் தோட்டம் அமைத்து பரமரித்து வருகின்றார். குறித்தநபரினால் இயற்கை உரத்தினை பயன்படுத்தி மா மரம், பப்பாசி மரம், தும்பை,பீக்கை, பீற்றுட் உட்பட்டவற்றை பயிரிட்டு மக்களுக்கு நஞ்;சற்ற உணவுகளை வழங்கும்வகையில் நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன், பப்பாசி பழத்தின் உற்பத்தி மூலம் நஞ்சற்றபழம் என்பதால் பொதுமக்களின் கொள்வனவு அதிகமாக காணப்பட்டு வருகின்றது.

நாட்டின் ஜனாதிபதியின்சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் கீழ் என்னால் மக்களுக்கு நஞ்சற்ற உணவு கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் கூட்டுப்பசளை தயாரிக்கப்பட்டு தோட்டத்தினை திறம்பட மேற்கொண்டு வருகின்றேன் என காவத்தமுனை மக்கா பாம் பண்ணையாளர் ஐ.ரி.முஹமட் தெரிவித்தார்.

எனது பண்ணையில் மா மரம், பப்பாசி மரம், தும்பை, பீக்கை, பீற்றுட் போன்;றபயிர்களை எனது பண்ணையில் தயாரிக்கப்பட்ட கூட்டுப்பசளைகளை பயன்படுத்தி தோட்டச்செய்கையை செய்துள்ளோம். அத்தோடு எனது பண்ணையில் தயாரிக்கப்பட்டு வரும் கூட்டுப்பசளைகளைமட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களுக்கு வினியோகம் செய்யும் வகையில் கூட்டுப்பசளைகளை தயாரிக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றேன் என்றார்.

ஜனாதிபதியின் நஞ்சற்றதேசத்தினை உருவாக்கும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர்பிரிவில் காகிதநகர் பகுதியில் மக்கா பண்ணையில் கூட்டுப்பசளை தயாரிக்கப்பட்டு நஞ்சற்றமுறையில் தோட்டப் பயிர்களும் பயிரிடப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி விவசாய போதனாசிரியர் எம்.ஐ.எம்.ஜமால்டீன் தெரிவித்தார்.

ஓட்டமாவடிபிரதேச செயலாளர் பிரிவில் பதினையாயிரம் மெற்றிக் தொண் கூட்டுப் பசளை தேவையாக உள்ளது.இந்த நிலையில் முதல்கட்டமாக இருநூறு மெற்றிக் தொண் கூட்டுப் பசளையை விற்பனை ரீதியாகவினியோகிப்பதாக பண்ணையார் வாக்குறுதி வழங்கியுள்ளார். அத்தோடு தனது பண்ணையை முற்றுமுழுதாகஇயற்கை பசளையுடன் கூடிய பண்ணையாக மாற்றும் வகையில் வேலைத் திட்டத்தினை மேற்கொண்டுவருகின்றார்.

# இலங்கை வாழ் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## அவுஸ்திரேலியாவில் கல்வித் தகைமையுடன் கூடிய பகுதி நேர வேலைவாய்ப்பு!!



UNSW Global

**Are you after O/Levels?**

Start your Journey to a World TOP 50 University in Australia from Sri Lanka

Apply now

**UNSW FOUNDATION STUDIES**

Contact us to start your journey

Lavanya:
077 489 8773
lavanya.k@aibt.education

AIBT CAMPUS

சாதாரண தரத்தில் (O/L) சித்தி அடைந்த 24 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 25 - 35 வயதிற்கு உட்பட்ட (Mature Students) பொருத்தமான ஆரம்பக் கட்ட கல்வித்தகமை உடையவர்களுக்கு, இதோ உலகின் 44 ஆவது இடத்தில் உயரிய கல்வித்தரத்தில் திகழும் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமான The University of New South Wales Global, Sydney, Australia (https://www.unswglobal.unsw.edu.au/) தனது Foundation studies கற்கையை எம் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவுஸ்திரேலியா நாட்டில் பொருத்தமான பகுதிநேர வேலை வாய்ப்புடன் மேற்படிப்பையும் தொடரக் கூடிய அருமையான வாய்ப்பையும் வழங்குகிறது . இப்பாட நெறியினை கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள AIBT(Asian Institute of Business and Technologyd https://aibt.education/ ) கல்விக் கூடத்தில் மாத்திரமே கற்பிக்க அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமானது கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அனுமதி கொடுத்துள்ளது.

**அக்டோபர் 5ஆம் திகதி**
பாடகக் கற்கை ஆரம்பிக்கப்படவுள்ளது

# "GRAB YOUR OPPORTUNITY"

**Are you exploring opportunities for world class education with an Australian University?**

The UNSW Global (https://www.unswglobal.unsw.edu.au/) offers an exciting opportunity for you through AIBT Campus (Asian Institute of Business and Technology- https://aibt.education/ ) in Colombo and Kandy providing students a dedicated pathway to achieve their university dreams in Australia to study at University of New South Wales ,Sydney, a top rank work class university .

AIBT will deliver the UNSW Global Foundation Studies Program to students at its campuses in Colombo and Kandy.

For more information, please Call Ms. Lavanya on 077 4898 773 for the course commencing Oct 5th ,2021

## சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்!!! விண்ணப்பிக்க முந்துங்கள்!!

மேலதிக விபரங்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெற்றுக் கொள்ள அழைக்கவும் Ms.Lavanya - 077 4898 773

Child Friendly Cities Initiative

# Batticaloa Kids Got Talent

# CONTEST

## For Children's Day 2021

வயதெல்லை: 5-15

உங்கள் ஆக்கங்களை எங்களுடன் புகைப்படமாகவோ அல்லது வீடியோ பதிவாகவோ பகிர்ந்து கொள்ளுங்கள்:

- வரைதல் (புகைப்படத்தை அனுப்பவும்)
- நடன வீடியோ
- பேச்சு வீடியோ
- வீட்டுத் தோட்ட வீடியோ சுற்றுப்பயணம்
- கைவேலைப்பொருட்கள் -உங்கள் சொந்த படைப்புகள் வீடியோவாக
- கதை சொல்லும் வீடியோ
- பாடல் பாடிய வீடியோ

கீழே உள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை உங்கள் ஆக்கங்களுக்காக தெரிவு செய்யவும்.
1.கோவிட் 19 தொற்றுநோய் உங்கள் வாழ்க்கை, கல்வி மற்றும் கனவுகளை எவ்வாறு பாதித்தது?
2. உங்கள் நகரை சிறுவர் சிநேகமாக எவ்வாறு பார்க்க விரும்புகிறீர்கள்?

உங்கள் படைப்புகளை பின்வரும் வாட்ஸ்அப் அல்லது மின்னஞ்சலில் 15.10.2021 க்கு முன்னர் சமர்ப்பிக்கவும்

+94768183878

Tharniya.Thavendraan@CERIkids.org

ceri SRI LANKA

unicef for every child සෑම දරුවෙක් වෙනුවෙන්ම ஒவ்வொரு சிறுவர்களுக்காகவும்



நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59



“கல்விக்கு கைகொடுப்போம்”
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206



கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

| | |
|---|---|
| துரித வேகம். | London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service |
| உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. | All Countries |
| பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. | 100% Insured |
| 365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. | 365 Days 24 Hours Service |
| உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். | Door to Door Delivery |
| இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. | Online Tracking System |
| சிறந்த பொதியாக்கம். | Quality Packing |

நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.

இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.

எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.

அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.

வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி

GRÜNAU 1
# ITALY # INDIAN # THAI # SRILANKA
Fruhstuck / Mittagessen / Abendessen
Öffnungszeiten
Montag - Sonntag
08:00AM - 22:00PM



ORDER NOW
TANDOORI
FISH SPL
BBQ GRILL
BIRIYANI SPL
CURRY GERICHTE
MIX SABJI DESERTSLIEF
CALL for FREE DELIVERY
044 260 2222 079 563 2222
Meierwissenstr 58, 8064 Zürich
www.grunau1restaurant.com

# நஞ்சற்ற உற்பத்திக்காக விவசாயிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள்

(இஃஜாஸ் ஏ பரீட்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, பேரமடு கிராமத்தில் 9 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மானிக்கப்பட்ட இரு விவசாய கிணறுகள் கையளிக்கப்பட்டதோடு, சேதனப் பசளையை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட சமுதாய சந்தையும் திறந்துவைக்கப்பட்டது.





அகம் மனிதாபிமான பல நிலையத்தால் இந்தக் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டன. இதன்போது மேலும் இரு நீர் இறைக்கும் இயந்திரங்களும் வியாபாரிகளுக்கான துவிச்சக்கர வண்டிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த வைபவத்தில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான சமன் தர்சன பாண்டிகோராள, கந்தளாய் பிரதேச செயலாளர், பேர மடுவ அரலிய மகளிர் அமைப்பு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அகம் மனிதாபிமானம் வள நிலைய பணிப்பாளர் கண்டுமணி லாவெகுகராசா கருத்து தெரிவிக்கும் போது,

நிலையான உணவைப் பெறுவதற்கான வாழ்வாதார திட்டம் என்ற தொனிப்பொருளில் பல்வேறு வேலைத்திட்டங்களை இந்த மாவட்டத்தில் இன மத வேறுபாடுகளுக்கு அப்பால் செய்து வருகின்றோம்.

மாவட்டச் செயலாளரின் அனுமதியுடன், இம்முறை 11 மில்லியன் ரூபா செலவில் இந்த மாவட்டம் முழுவதும் வாழ்வாதாரத்திற்கான உதவிகளை செய்ய முன் வந்திருக்கின்றோம். இதற்காக 125 பெண்களை தெரிவு செய்து இருக்கிறோம். இதில் விசேட தேவையுடைய பெண்கள், பாதிக்கப்பட்ட பெண்கள் சுய தொழில் ஆர்வம் உள்ள பெண்கள் உள்ளடக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தின் கீழ் 15 விவசாயக் கிணறுகள், 15 நீரிறைக்கும் இயந்திரங்கள், 25 வியாபார சைக்கிள்கள், பிரதேசத்திற்கு பொறுத்தமான விதைகள் மற்றும் இயற்கை விவசாயம் தொடர்பான ஆலோசனைகள் போன்றவைகள் உள்ளடக்கியிருக்கின்றன என்று தெரிவித்தார். திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான சமன் தர்சன பாண்டிகோராள கருத்து தெரிவிக்கையில், திருகோணமலை மாவட்டத்தில் இவ்வாறான விவசாய கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுக்கும்போது, உள்நாட்டு உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டு, விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும். அரசாங்கம் கட்டம் கட்டமாக மக்களுடைய குறித்த தேவைகளை நிறைவேற்ற முயற்சிக்கின்றது. இருப்பினும் அரசாங்கத்துடன் இணைந்து அரசசார்பற்ற நிறுவனங்களும் மக்களுடைய குறித்த வசதிகளை மேம்படுத்தி கொடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. இந்த வகையில் அகம் மனிதாபிமான வள நிலையம் இந்தக் கிராமத்தை தெரிவு செய்திருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது.

அதிமேதகு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தி கிராமிய மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. திருகோணமலை மாவட்டத்திலும் இச்செயற்றிட்டங்கள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வகையில், எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில், ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்கும் தலா 30 இலட்சம் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கீடு செய்ய உள்ளது. இதன் மூலம் கிராமிய மக்கள் தங்களுக்குத் தேவையான தொழில் துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்துக் கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

# சாய்ந்தமருதில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்: கோள்கலன்களை சேகரித்து ஒப்படைக்குமாறு வேண்டுகோள்





( அஸ்லம் எஸ்.மௌலானா )

சாய்ந்தமருது பிரதேசத்தில் டெங்கு நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு, கல்முனை மாநகர சபையின் ஒத்துழைப்புடன் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.


பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் முஹம்மட் நியாஸ் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் நெறிப்படுத்தலில் கடந்த சில நாட்களாக இந்நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது சாய்ந்தமருது பிரதேசத்தின் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு ரீதியாக சுற்றுச் சூழலில் வீசப்பட்டு, காணப்படுகின்ற யோகட், ஐஸ் கிரீம் மற்றும் தயிர் டப்பாக்கள், சிரட்டைகள், பிளாஸ்டிக் பாத்திரங்கள் உள்ளிட்ட கொள்கலன்கள் மற்றும் கழிவுகள் யாவும் மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவை வாகனங்களில் சேகரித்து அகற்றப்பட்டு வருகின்றன.

அத்துடன் பராமரிப்பின்றிக் கிடக்கும் வெற்றுக்காணிகள், கிணறுகள், நீர்த்தாங்கிகள் மற்றும் உள்ளிட்ட டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், பொது மக்கள் தமது சுற்றுச் சூழலில் காணப்படும் நீர் தேங்கும் பொருட்களை சேகரித்து வைத்து, டெங்கு ஒழிப்பு படையணி வரும்போது ஒப்படைக்குமாறு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நேற்று (10) வேண்டுகோள் விடுத்துள்ளது.

# போதை மாத்திரைகளுடன் இருவர் சம்மாந்துறையில் கைது



(ந.குகதர்சன்)

வாழைச்சேனை கல்குடா பிரதேசத்துக்கு கொண்டு வரப்படவிருந்த ஒரு தொகை போதை மாத்திரைகளுடன் 31 வயதுடைய இருவர் சம்மாந்துறையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நீலாவணை விஷேட அதிரடிப்படையினரோடு இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

போதை மாத்திரை கொண்டு வர பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டதுடன், இருவரும் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# விடை கொடு விழா 10.10.2021

எம்.ஐ.எம்.றியாஸ்

அட்டாளைச்சேனை கல்விக் கோட்ட அதிபர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்விக்கு கரம் கொடுத்தவர்களுக்கான விடை கொடு விழா நேற்று முன்தினம் அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) கேட்போர் மண்டபத்தில் நடைபெற்றது.





அட்டாளைச்சேனை கல்விக் கோட்ட அதிபர்கள் சங்கத்தின் தலைவரும்,அறபா வித்தியாலயத்தின் அதிபருமான எம்.ஏ.அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப்பணிப்பாளர் அஷ்சேய்க் ஏ.எம். றஹ்மத்துல்லா,அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களான ஏ.ஜீ.பஸ்மில்,திருமதி எம்.எம்.சித்திபாத்திமா,ஏ.எம்.ஹசீம்,கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் ஏ.பீ.சாஹீர் அட்டாளைச்சேனைகோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.கஸ்ஸாலி உட்பட உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் ஒலுவில்,பாலமுனை,அட்டாளைச்சேனை பிரதேசப் பாடசாலைகளின் அதிபர்கள்,பிரதி அதிபர்கள் கலந்து கொண்டனர்.

இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் இரண்டு தரம் வலயக்கல்விப்பணிப்பாளராக இருந்து கல்வி அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புகளுடன் அரும்பணியாற்றி கிழக்கு மாகாணம் மற்றும் தேசிய ரீதியில் அக்கரைப்பற்று வலயம் பெயர் பொறிப்பதற்கு காரணமான ஓய்வு பெற்ற வலயக்கல்விப்பணிப்பாளர் சட்டமாணி அஷ்சேய்க் ஏ.எல்.எம்.காசீம்,ஓய்வு பெற்ற அதிபர்களான ஏ.எல்.கமாறுதீன்,

ஏ.எல்.கே.முஹம்மட்,எஸ்.எல்.ஆதம் பாவா ஆகியோர்களின் கல்விப்பணிகளைப் பாராட்டி அதிபர்களால் வாழ்த்துப்பத்திரம்,நினைவுப்பரிசு, நினைவுச் சின்னம் வழங்கியும்,பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஓய்வு பெற்ற வலயக்கல்விப்பணிப்பாளர் சட்டமாணி அஷ்சேய்க் ஏ.எல்.எம்.காசீம் உரையாற்றுகையில்,

வலயக்கல்விப் பணிப்பாளராக செயற்பட்ட காலத்தில் நான் ஒருநாளும் அதிகாரியாக செயற்பட்டதில்லை.பொதுவாக நான் மேற்பார்வையாளராகவே இருந்து செயற்பட்டுள்ளேன்.இதன் காரணமாகத்தான் நமது வலயம் கடந்த க.பொ.த.சாதாரணப் பரீட்சை முடிவுகளின் படி கிழக்கு மாகாணத்தில் 1ம் நிலையும் தேசிய ரீதியில் 9ம் இடமும் கிடைத்தது என்றார்.

# பாதுகாப்பு படையினரால் காரைதீவில் உலருணவு போதிகள் வழங்கி வைப்பு



(மாளிகைக்காடு நிருபர்)

ஆர்மி தினத்தை முன்னிட்டு காரைதீவு பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கும் குடும்பங்களுக்கு காரைதீவு 3ம் படை விஜய ரெஜிமென்ட் ஏற்பாட்டில் உலருணவு வழங்கும் நிகழ்வு காரைதீவு படைமுகாம் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் குமாராவின் தலைமையில் காரைதீவு படைமுகாமில் இடம்பெற்றது.



சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக சங்க தலைவரும், முபாரக் குழும தலைவருமான எம்.எஸ். எம். முபாரக்கின் அனுசரணையிலும் பங்குபற்றலுடனும் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பாதுகாப்பு படை காவலரன் பொறுப்பதிகாரி மேஜர் விஜயகோன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இந்த உலருணவு பொதிகளை வழங்கி வைத்தார்.

# பெரும்போக வேளான்மை செய்கைக்குரிய வேலைகள் ஆரம்பம்

(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போதைய நிலையில் பரவலாக மழையை நம்பி வேளாண்மைச் செய்யும் பெரும்போக வேளாண்மைச் செய்கைக்குரிய ஆரம்பக் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மாவட்டத்தின் படுவாங்கரைப் பெருநிலப்பரப்பின் போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் பெரும்போக வேளாண்மைச் செய்வதற்குரிய வயல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



கோடை காலம் முடிவுற்று தற்போது அவ்வப்போது தலை மழை பெய்யத் தொடங்கியதையடுத்து பெரும்போக வேளாண்மைச் செய்வதற்குரிய அருகு கொத்துதல், வரம்பு கட்டுதல், உழவு செய்தல் போன்ற ஆரம்ப வேலைகளை விவசாயிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இம்முறை அப்பிரதேசத்தில் சுமார் 19069 இற்கு மேற்பட்ட வயற்காணிகளில் பெரும்போக வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளன.

எனினும் கடந்த வருடங்களைப் போலல்லாமல் இவ்வருடம் தாம் பாவித்து வந்த செயற்கை உரங்களுக்குப் பதிலாக இயற்கை உரங்களைப் பாவிக்குமாறு அரசாங்கம் அறிவித்துள்ளதையடுத்து, ஒரு தீர்மானமற்ற முறையில் வேளாண்மைச் செய்கையை மேற்கொள்வதற்காகத்தான் வயலைப் பண்படுத்தி வருவதாக விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

தங்களது வயங்காணிகள் செயற்கை உரத்திற்கு பழக்கப்பட்டு விட்ட நிலையில் இயற்கை உரங்கள் வேளாண்மைச் செய்கைக்கு எந்த அளவிற்குச் சாத்தியமாகும் எனத் தெரியாத நிலையில் இவ்வருடம் பெரும்போக வேளாண்மைச் செய்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும், இவ்வருடத்தின் நிலமையைப் பார்த்துதான் இனிவரும் காலங்களில் தமது வேளாண்மைச் செய்கை தொடரும் எனவும் அப்குபதி விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கான அறிவித்தல்

கொவிட் நோயால் பாதிக்கப்பட்ட அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களையும் மருத்துவமனை சிகிச்சை முறைக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர், வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா இதனை தெரிவித்தார்.

தற்போது கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்களில் எண்ணிக்கை குறிப்பிட்டளவில் குறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொவிட் தொற்றுக்கு உள்ளாகும் அனைத்து கர்ப்பிணி தாய்மார்களையும் மருத்துவமனையில் சேர்க்கவும், அவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. எங்கள் மருத்துவமனை அமைப்பு தயாராக உள்ளது. மருத்துவமனைகளில் உள்ள அனைத்து தாய்மார்களையும் எங்களால் கவனித்துக் கொள்ள முடியும். என்றார்

# அமைச்சர் ஹேகலிய உறுப்பினர் ராஜன் சந்திப்பையடுத்து நடவடிக்கை!

நேரமும் இயங்கும்வகையில் அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டமையானது அப்பகுதி மக்களை வியப்பில்ஆழ்த்தியுள்ளது.

குறித்த சந்திப்பு கடந்த புதன்கிழமை கொழும்பிலுள்ள அமைச்சரது அலுவலகத்தில் நடைபெற்றது. மாத்தளை மாநகரசபை முதல்வர் சந்தனம் பிரகாஷ் சந்திப்பிற்கான ஏற்பாட்டை செய்திருந்தார்.

சந்திப்பின்போது நீர்பாசனத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ,சுகாதாரஅமைச்சின் செயலாளர் டாக்டர் எஸ்.எச்.முனசிங்க, பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேலகுணவர்த்தன. ,மத்தியமாகாண ஆளுநர் லலித் யு கமகே, மாத்தளைமுதல்வர் ச.பிரகாஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர். பனங்காடு பிரதேசவைத்தியசாலையாக 2019.01.27 இல் உத்தியோகபூர்வமாக இயங்க ஆரம்பித்தபோதிலும் அங்குள்ள அவசரசிகிச்சைப்பிரிவு 24மணிநேரமும் இயங்கவில்லை.

அதற்கு காரணம் அது இரவில் இயங்குவதற்கு இரவுவேளையில் வைத்தியர் தங்கியிருக்கமுடியாத நிலை நிலவியது.கூடவே வைத்தியர் பற்றாக்குறையும் நிலவியது.

இதனை நிவர்த்திசெய்துதருமாறு கோரும் மகஜரை உறுப்பினர் ராஜன் அமைச்சரிடம் கையளித்து கலந்துரையாடினார். அதனையடுத்து இவ் அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏலவே வைத்தியசாலையில் இரவில் வைத்தியர் தங்கியிருந்து அவசரசிகிச்சைப்



பிரிவை 24மணிநேரமும் இயக்கவைக்கவேண்டுமென வைத்தியசாலை அபிவிருத்திச்சபை கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனிடம் வேண்டுகோள்விடுத்திருந்தது. அவர் அதனை உடனடியான சுகாதாரஅமைச்சரின் பிரத்தியேகசெயலாளரின் கவனத்திற்கு கொண்டுவந்தார். அதனையடுத்து வைத்தியரொருவர் நியமிக்கப்பட்டார்.

பின்பு அவர் அமைச்சரைச்சந்தித்து குறித்த கோரிக்கையை முன்வைத்தபோது அமைச்சர் அன்றே அவசரசிகிச்சைப்பிரிவை 24மணிநேரமும் இயங்கவைக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இந்தஇடத்திலேயே அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டார்.

அதன்படி அன்றிரவே இரவிலும் அவசரசிகிச்சைப்பிரிவு இயங்க ஆரம்பித்துள்ளது.

இதனையடுத்து மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.அபிவிருத்திச்சபையினர் உறுப்பினர் ராஜனுக்கும் அமைச்சர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலை தற்போது 3வைத்தியர்களுடன் அதனைச்சுற்றியுள்ள அழிக்கம்பை பனங்காடு மகாசக்திக்கிராமம் புளியம்பத்தை கண்ணகிகிராமம் கவடாப்பிட்டி நாவக்காடு தீவுக்காலை போன்ற பலகிராமங்களில் வாழும் சுமார் 25ஆயிரம் மக்களின் சுகாதாரத்தேவையை கவனித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்க தமது தேவைக்காக அப்பாவி இளைஞர்களை சிறையில் வைக்கவும் செய்வார்கள்

சிறையில் வைக்கவும் செய்வார்கள் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

3000 பனை விதைகள் நடும் வாலிபர்கள் என்னும் தலைப்பில் பனை விதைகள் நடும் வேலைத்திட்டம் இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் போரதீவுப்பற்றில் பனை விதைகள் நடும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

போரதீவுப்பற்று பிரதேச வாலிப முன்னணியின் இணைப்பாளர் ம.கோபிநாத்தின் வழிநடத்தலில் வெல்லாவெளி,கோவில் போரதீவு ஆகிய பகுதிகளில் இந்த பனம் விதை நடும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் நடராஜா,போரதீவுப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சுவிகரன் உட்பட பிரதேசசபை உறுப்பினர்கள்,விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்,

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே கடந்த ஒருவருட காலமாக தற்போதிருக்கின்ற அரசாங்கமானது மக்களால் தெரிவுசெய்யப்பட்டதற்குப் பிறகு விஷேடமாக மட்டக்களப்பு மாவட்டத்திலிருக்கின்ற அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முதன்முறையாக 20வருடங்களுக்குப் பிறகு தெரிவுசெய்யப்பட்ட நிலையிலே மட்டக்களப்பு மாவட்டத்திலிருக்கின்ற வளங்களை அழித்துக்கொண்டிருக்கின்ற செயற்பாட்டை காணக்கூடியதாக இருக்கின்றது.

எங்களுடைய மண்வளம், காணிகள், வீதிகள் போன்ற அனைத்து விடயங்களையுமே இவர்கள் மோசமாக கையாள்வதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. விஷேடமாக மண்அனுமதிப் பத்திரங்கள் அரசாங்கத்துடன் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களிலேயே இருப்பது வரலாற்றிலே இதுதான் முதற்தடவையாக இருக்குமென நான் நம்புகின்றேன்.

இலங்கை தமிழரசுக் கட்சியானது தமிழ் மக்களின் நலனுக்காக தொடர்ச்சியாக செயற்படும் ஒரு கட்சியாகும். கடந்த ஏழு தசாப்தங்களாக தமிழ் மக்களின் உரிமைக்குரலாக செயற்பட்ட ஒரு கட்சியாகும். எங்களுடைய பிரதேசத்திலிருக்கின்ற வளங்களை பாதுகாப்பதும் எங்களுடைய ஒரு பொறுப்பாக நாங்கள் எடுத்திருக்கின்றோம். இந்த நோக்கத்திற்காகத்தான் ஏனைய கட்சியை சேர்ந்தவர்கள் எங்களுடைய வளங்களை அழித்து தங்களுடைய வருமானத்தை மட்டும் பார்க்கும்போது எங்களுடைய வளங்களைப் பயன்படுத்தி தங்களுடைய குடும்பங்களையும் தாங்கள் சார்ந்தவர்களையும் ஆதரவாளர்களையும் மாத்திரம் பார்த்து வருமானத்தை உழைக்கின்றபோது இலங்கைத் தமிழரசுக் கட்சியானது பனைவிதைகளை நட்டு மட்டக்களப்பு மாவட்டத்திலே எதிர்காலத்தில் நல்லதொரு இயற்கை சூழலை அமைப்பதற்கும் எங்கள் மண்வளத்தை பாதுகாப்பதற்கும் உதவியாக இந்தத் திட்டத்தை முன்னெடுத்திருக்கின்றது.

எங்களுடைய அரசியல் ரீதியான விடயங்களில் தமிழரசுக் கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் எவ்வாறு அக்கறையாக இருக்கின்றதோ அதேபோல எங்களுடைய இயற்கை வளங்களை பாதுகாப்பதிலும் நாங்கள் அக்கறையாக இருக்கின்றோம்.

இந்த அரசாங்கமானது தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை தொடர்ச்சியாக செய்துகொண்டிருக்கின்ற ஒரு அரசாங்கமாக இருக்கின்றது. நானும் பாராளுமன்றத்தில் அடிக்கடி பேசுகின்ற ஒரு விடயம். இந்த அரசாங்கமானது எங்களுடைய இளைஞர்களை தொடர்ச்சியாக அச்சுறுத்தி பலரை பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்துள்ளது. பனைவிதைகள் நடும் இந்த நிகழ்வில் எங்களுடைய வாலிபர் முன்னணியின் பல உறுப்பினர்கள் இல்லை. இலய்கை தமிழரசுக் கட்சியின் முக்கிய செயற்பாட்டாளராக இருந்த சோபனன் அவர்களை கிட்டத்தட்ட ஒருவருடமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்து வைத்திருக்கின்றனர். விடுதலைப்புலிகள் தொடர்பில் முகநூலில் பதிவிட்டதாக கூறியே கைதுசெய்யப்பட்டார். இது அரசாங்கத்தின் இரட்டைவேடத்தினைக் காட்டுகின்றது.

தெற்கில் விடுதலைப்புலிகளை மீளகட்டியெழுப்பும் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பதாக கூறி சிங்களை மக்களை அச்சங்கொள்ளச்செய்வதற்காக இவ்வாறு தமிழ் இளைஞர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைப்புலிகளுடன் தொடர்புள்ளவர்களாகக் கூறி நீண்டகாலமாக எந்தவித விசாரணைகளும் இன்றி தடுத்துவைத்துள்ளனர்.

நேற்றைய தினம் நடைபெற்ற ஒரு திறப்பு வழாவிலே கே.பி அவர்களை இந்த நாட்டினுடைய சிறுவர் கல்விக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த அவர்கள் கட்டியணைத்து மிகவும் பாசமாக உரையாடுவதை காணக்கூடியதாக இருந்தது. விடுதலைப் புலிகளுடைய சொத்துக்கள் தன்னிடம் இல்லை என்று அவர் பல விடயங்களை சொல்கின்றார். அவர் என்ன சொல்கின்றார் என்பதை நாம் விட்டுவிடுவோம். கே.பி அவர்கள் போர்க்குற்றம் புரிந்தார் என பல குற்றச்சாட்டுகள் அவர் மீது இருக்கின்றது.



ஆனால் எங்களுடைய தமிழ் இளைஞரொருவர் முகநூலிலே விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்ட ஒரு செய்தியை பதிவிட்டது ஒருவருடம் சிறையில் வைத்திருக்கக்கூடிய ஒரு குற்றம் ஆனால் கே.பி அவர்களை நீங்கள் கட்டியணைத்து உறவாடலாம். சிங்கள மக்கள் இதனை புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த அரசாங்கமானது தேவையெனக் கருதினால் எவரையும் தங்கள் மடியிலே வைத்திருப்பார்கள்,தங்கள் தேவைக்காக அப்பாவி இளைஞர்களையும் சிறையில் வைத்திருப்பார்கள். இதுவே இந்த அரசாங்கத்தினுடைய உண்மையான நிலைப்பாடாகும். யுத்தம் நிறைவடைந்து பன்னிரண்டு வருடங்கள் முடிவடைந்துவிட்டன. கே.பி மீது எத்தனையோ குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. ஆனால் இந்த அரசாங்கம் மட்டுமல்ல கடந்த நல்லாட்சி அரசாங்கமும் கே.பியை விசாரணை செய்ததாக நான் அறியவில்லை. இளைஞர்களுக்கு ஒரு நீதி, அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற எவராக இருந்தாலும் அவர்களுக்கு இன்னொரு நீதி என்பதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

பியால் நிசாந்த என்கின்ற இராஜாங்க அமைச்சரும் அவர் சார்ந்தவர்களும்கூட நான் பாராளுமன்றத்திலே பேசுகின்றபோது என்னைப் பார்த்து மிகமோசமான வார்த்தைகளைச் சொல்வார்கள். நேற்றைய தினம்கூட நான் கல்வியைப் பற்றி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த அவர்களிடம் கேள்வியை கேட்கின்றபோது நிமல்லன்சா அவர்கள் என்னை ஒரு தீவிரவாதி என்று சொன்னார். நான் அவரைப்பார்த்து நீ ஒரு குடுகாரன் என்று கூறினேன். இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்தவுக்கு கே.பி யார் என்பதை நிமல்லன்சாவால் சொல்ல முடியாதா? இப்படியான நாடகங்களை செய்து தொடர்ச்சியாக நீங்கள் தமிழ் மக்களை ஒருகாலமும் ஏமாற்ற முடியாது. சிங்கள மக்களையும் தொடர்ச்சியாக ஏமாற்ற முடியாது. தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியிலே இந்த அரசாங்கத்தின் உண்மையான முகத்தை நாங்கள் புரிந்துகொண்டுவருவதை அவதானிக்க முடிகின்றது. இனிவரும் காலங்களில் விஷேடமாக வடக்குகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் பாராளுமன்றத்திற்கோ மாகாணசபைக்கோ உள்ளூராட்சி சபைகளுக்கோ நீங்கள் தெரிவுசெய்து அனுப்புபவர்கள் மக்கள் நலன் சார்ந்த சிந்தனையோடு இருக்கின்றவர்களாக இருக்க வேண்டும். தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியிலே இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டுமென்று பனைவிதைகளை நடுகின்றவர்களைப்போல மக்கள் நலன் சார்ந்து சிந்திக்கின்றவர்களை தெரிவுசெய்து அனுப்ப வேண்டும். ஆற்றுவாழைகளை துப்புரவு செய்கின்றோம் என்ற பெயரில் மண்அனுமதிப்பத்திரங்களை வழங்கி எங்கள் மாவட்டத்தின் வளங்களை அழிக்கின்ற கட்சியைச் சேர்ந்தவர்களை தயவுசெய்து நீங்கள் தெரிவு செய்யாதீர்கள்.

மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என்று பசில் ராஜபக்ச அவர்கள் கூட்டத்தில் கூறிய விடயம் சிலவேளை இந்திய வெளிவிவகார செயலாளர் அவர்களின் வருகையின் சில விடயங்களாக இருக்கலாம் அல்லது ஐரோப்பிய ஒன்றிய விஜயத்தின் சில அழுத்தங்களாக இருக்கலாம். சுமந்திரன் அவர்களின் சட்டத்தினை அமுலாக்கி அதனூடாக தேர்தல் நடத்துவார்கள் என செய்திகளில் பார்த்திருந்தேன். மாகாணசபை கலைக்கப்பட்டு ஐந்துவருடங்கள் கடக்கவிருக்கின்றது. நிச்சயமாக தேர்தலை நடத்த வேண்டும். அதற்கு நாங்கள் ஆயத்தமாக இருக்கின்றோம் என்பதையும் சொல்ல வேண்டும். இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளை மக்கள் சரியாக அவதானித்திருந்தால் எதிர்வரும் காலங்களில் வடக்கு கிழக்கில் நிச்சயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சி வரும் என்பதை சொல்லலாம்.






# சிங்கம்போல யுத்தத்தை முடிந்த முன்னாள் இராணுவத் தளபதி தற்போது நரிபோல செயற்படுகின்றார் – சீ.பீ ரத்னாயக்க விமர்சனம்

(க.கிஷாந்தன்)

சிங்கம்போல யுத்தத்தை முடிந்த முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகா, பாராளுமன்றம் வந்த பிறகு நரிபோல செயற்படுகின்றார் என்று அமைச்சர் சீ.பீ ரத்னாயக்க விமர்சித்துள்ளார்.

நுவரெலியா, கொத்மலை பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு விமர்சித்தார்.

அமைச்சர் சீ.பீ ரத்னாயக்க மேலும் கூறியவை வருமாறு,

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது தற்போதைய ஜனாதிபதி பாதுகாப்புச்செயலாளராக செயற்பட்டார். இவர்களின் ஆதரவு இருந்ததால் அன்று சிங்கம்போல சரத்பொன்சேகா யுத்தத்தை முடித்தார். ஆனால் பாராளுமன்றம் வந்த பிறகு நரிபோல் செயற்படுகின்றார். பாரம்பரிய வைத்திய முறைமையை கொச்சைப்படுத்தும் வகையில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். நாம் பாரம்பரிய வைத்திய முறைமையை மதிக்க வேண்டும்.

அன்று நாம் உர மானியம் வழங்கினோம். ஏன் அவ்வாறு செய்தோம்? விவசாயிகள், விவசாயத்தில் ஈடுபடுவது குறைந்தது. விவசாயிகளின் பிள்ளைகள் தொழிற்சாலைகளுக்கு சென்றனர். இதனால் அரிசியைக்கூட இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே,



விவசாயத்தை பாதுகாப்பதற்காகவே அந்த முடிவு எடுக்கப்பட்டது.

அதேவேளை, பால்மா, சீமெந்து உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும். அடுத்த வாரத்துக்குள் நிலைமை வழமைக்கு திரும்பும் என்றார்.

# உளநல ஆரோக்கிய தினத்தில் கல்லடி பாலத்தின் வாவியை நீந்திக் கடந்த இளைஞன்

(எஸ்.சதீஸ்)




உலக உளநல ஆரோக்கிய தினம் ஒக்டோபர் 10ம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. இத்தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு கல்லடி பாலத்தின் அருகிலுள்ள வாவியை இளைஞர் ஒருவந் நீந்திக் கடக்கும் நிகழ்வு சனிக்கிழமை (10) இடம்பெற்றது.

மட்டக்களப்பைச் சேர்ந்த 20 வயதுடைய அமலநாதன் சஞ்சீவன் எனும் இளைஞனோ இவ்வாறு கல்லடி பாலத்தின் மட்டக்களப்பு நகர் பக்கமாக இருந்து கல்லடி பக்கமாக நீந்திச் சென்று உடல் உள ஆரோக்கியம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

மேற்படி இளைஞன் நீந்துவதற்கான நடவடிக்கைக்கு ஆரம்பத்தில் பொலிஸார் அனுமதி மறுக்கப்பட்டதுடன் பின்னர் பாதுகாப்பு உள்ளிட்ட முன்னாயத்தங்களை பரிசீலனை செய்தபின்னர் பொலிஸார் அனுமதித்தனர்.

தற்போதய கொவிட் தொற்று காலத்தில் அனைவரும் உள நலத்தையும் உடல் நலத்தையும் பேணவேண்டும் என இன்றைய சர்வதேச உள நல ஆரோக்கிய தினத்தில் அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவே இந்த நீச்சல் நடவடிக்கையினை தான் மேற்கொண்டதாக அமலநாதன் சஞ்சீவன் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் உத்தியோகத்தரினால் சிரமதானம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மாவட்ட செயலகத்தில் உற்பத்திறன் மேன்படுத்தல் செயல்பாட்டினை முன்னெடுக்கும் நொக்குடன் வளாகத்தினை சுத்திகரிக்கும் செயல்தத்திட்டத்தினை இன்று மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

செயலகத்தின் சகல பிரிவினரும் சிரமதானப் பணியில் கலந்துகொண்டு செயலக வளாகத்தின் புறச் சூழலை சுத்தப்படுத்தி அழகுபடுத்தும் பணிகள் இன்று முன்னெடுக்கப்பட்டு வந்தமைகுறிப்பிடத்தக்கது.

உற்ப்பத்திறனை மேன்படுத்துவதன் ஊடாக வினைத்திறனான சேவையினை சேவை நாடிகளுக்கு வழங்கவும் தடையின்றிய துரிதமான சேவையினை மக்களுக்கு உரியகாலத்தில் வழங்கவும் இச்செயல்பாடுகள் ஊடாக முன்னெடுக்கமுடியும் எனும் அரசின் திட்டத்தினை அமுல்ப்படுத்தும் செயல்த்திட்டமாக அமைகின்றது.

உற்ப்பத்தி திறன் மூலமாக தலைமைத்துவம் சேவை வழங்கள் பணிக்குழுவினரி திருப்திகரமான பூரன ஒத்துளைப்பான சேவையினை பெற்றுக்கொள்வதும் புத்தாக்கம் மிக்க சேவையினுடாக அடைவ மட்டத்தினை உச்சமான அளவு அடைவதும் சேவைநாடியின் நன்மதிப்பினை பெறுவதுமானதாக அமையும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உற்ப்பத்திறன் போட்டியில் பங்கொள்வதற்கென 54 நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்தது அதில் 49 நிறுவனங்கள் போட்டியில் பங்கு பற்றும் தகுதினை கொண்டிருந்தது



அதன் அடிப்படையில் 20 பாடசாலைகளும் 29 திணைக்களங்களும் போட்டியில் பங்கு கொள்கின்றது மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு தேசியரிதியில் பரிந்துரைசெய்யப்பட்டு பரிசில்களும் சான்றிதல்களும் வழங்கப்படும் கடந்த முறை உற்பத்திறன் போட்டியில் அகில இலங்கை ரிதியில் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மூன்றாம் இடம் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

# 36 வருடங்களுக்கு முன் இடமாற்றப்பட்ட தபால் நிலையத்தினை மீண்டும் கோரும் வாகனேரி மக்கள்

(ந.குகதர்சன்)



கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் வாகனேரி பகுதியில் இயங்கி வந்த உபதபால் நிலையம் 1985ம் ஆண்டு தற்காலிகமாக இடமாற்றப்பட்ட நிலையில் மீண்டும் வாகனேரி பிரதேசத்திற்கு வரவில்லை என்று கோரி வாகனேரி பிரதேச மக்கள் சனிக்கிழமை சர்வதேச அஞ்சல் தினத்தினை முன்னிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாகனேரி பகுதியில் இயங்கி வந்த உபதபால் நிலையமானது கடந்த 1985ம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக ஒட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காவத்தமுனை எனும் இடத்திற்கு இடமாற்றப்பட்டு இன்று வரை இயங்கி வருகின்றது.

தற்போது நாட்டில் நிலைமை சீராகி மக்கள் இப்பிரதேசத்தில் இயல்பு நிலையில் வாழ்ந்து வருகின்ற நிலையில் இடமாற்றம் செய்யப்பட்ட தபால் நிலையத்தினை மீண்டும் வாகனேரி பகுதிக்கு இயங்கச் செய்யுமாறு கோரி வாகனேரி பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது உதவாத அரசியல்வாதிகளிடமும் நாம் இனி ஏமாறமாட்டோம், எம்மை அலட்சியம் செய்யும் அதிகாரிகளிடம் அடிமையாய் தலைகுனியவும் மாட்டோம், தபால் நிலைய சேவையினை பெற கடந்த 30 வருடங்களுக்கு மேலாக மிகவும் சிரமப்படுகின்றோம் எங்களுக்கு நீதி வேண்டும், அதிகாரிகளே பத்து ரூபாய் முத்திரை வாங்க ஆயிரம் ரூபாய் ஆட்டோ செலவு இது நியாயமா?, 250 ரூபாய் முத்திரை பெற 20 கிலோ மீற்றர் நடை பயணம் எமது கஷ்ட நிலை புரியாதா?, வாகனேரி தபால் நிலையில் மீண்டும் இயங்க நடவடிக்கை எடுங்கள், ஏழைகளின் கோரிக்கையை நிராகரிக்காதே, எமது உரிமையை மறுக்காதே என பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் கலந்து கொண்டனர்.

குறிப்பாக ஓய்வூதியம் பெறுவோர், அரசாங்க உதவிக் கொடுப்பனவு பெறும் முதியவர்கள், விசேட தேவையுடையோர், மின்சார பட்டியல் கட்டணம் செலுத்துவோர் உட்பட தபால் நிலையத்தின் மூலம் சேவை பெறுவோர் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே எங்களுக்கு எங்கள் வாகனேரி பகுதியில் இயங்கி வந்த உபதபால் நிலைய சேவையை மீண்டும் எங்கள் பகுதிக்கு மாற்றம் செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வாகனேரி பகுதியில் இயங்கி வந்த தபால் நிலைய கட்டடம் தற்போது சேதமடைந்த நிலையில் அத்திவாரத்துடன் மரங்கள் நிறைந்த இடமாக காட்சியளிப்பதைக் காணக்கூடியதாக உள்ளதுடன், ஒட்டமாவடி காவத்தமுனையில் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நால்வரை காணவில்லை

(ந.குகதர்சன்)

வாழைச்சேனையில் இருந்து கடந்த மாதம் 26ம் திகதி ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற படகில் இருந்து எந்த தகவலும் கிடைக்கவில்லை என்று படகின் உரிமையாளர் எம்.எஸ்.அன்வர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் வெள்ளிக்கிழமை மாலை முறைப்பாடு செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

கடந்த செப்டம்பர் மாதம் 26ம் திகதி வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச்சென்ற குறித்த படகிலிருந்து சனிக்கிழமை வரை எந்தவித அறிவித்தலும் தமக்கு கிடைக்கவில்லை என்று படகின் உரிமையாளர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

குறித்த படகில் நான்கு பேர் சென்றதாகவும் குறித்த படகு நீலநிறம் என்றும்| என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்,



இதில் வாழைச்சேனையைச் சேர்ந்த எம்.வி.ரிஸ்கான், எம்.எச்.முஹம்மட், ஏ.எம்.றியாழ், கே.எம்.ஹைதர் ஆகியோர் சென்ற நிலையில் இன்னும் தகவல் கிடைக்கப்பெறவில்லை. குறித்த படகு தொடர்பான தகவல்கள் ஏதும் கிடைக்கும் பட்சத்தில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கமான 065225709 என்ற இலக்கத்துடன் அல்லது படகு உரிமையாளரின் தொலைபேசி இலக்கமான 0779581915 இலக்கத்திற்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# காது பரிசோதிக்கும் கருவி அன்பளிப்பு




இஃஜாஸ் ஏ பரீட்

திருகோணமலை ரோட்டரி கழகத்தின் சார்பில் திருகோணமலை ரோட்டரி கழகத்தின் தலைவர் திரு த. அகிலன் அவர்களால் 25 இலட்சம் பெறுமதியான காது பரிசோதிக்கும் கருவி அன்பளிப்பாக வழங்கப் பட்டது

இவ் நிகழவுக்கு திருகோணமலை பொது மருத்துவ மனையின் பணிப்பாளர் மருத்துவர் ஜெகத் விக்கிரமரத்ன அவர்களுக்கு ரோட்டரி கழகத்தின் சார்பில் அதன் தலைவர் அகிலன், பொருளாளர் சக்தி பவன், திரு ரகுராம் மற்றும் செயலாளர் பிரபாகரனால் மக்கள் பாவனைக்காக கையளிக்கப் பட்ட்து.

இவ் நிகழ்வில் அனுசரணையாளர்களான கண்டி ரோட்டரி கழகத்தின் சார்பில் Rtn. Asela kukatunga and Ann Richelle பங்கு பற்றினார்கள்.

# தீயில் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உதவி



(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் ஏற்பாட்டில் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சந்திவெளி கிராமத்தில் தீயில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு உதவிகள் இன்று வழங்கி வைக்கப்பட்டது.

சந்திவெளி நாவலடி ஜீவபுரம் வீதியில் வசிக்கும் அழகையா தெய்வநாயகம் (71 வயது) மற்றும் நாகமணி யோகம்மா (77வயது) என்பவர்கள் வசித்து வந்த நிலையில் குடிசை வீடு முற்றாக தீயில் எரிந்துள்ளது.

மனைவி சோறு சமைத்த நிலையில் கீரை வகை பறிக்க சென்ற சமயத்தில் குடிசை வீட்டில் தீ பரவுவதை அவதானித்த மனைவி உடமைகளை எடுக்க வீட்டிற்குள் செல்வதை அறிந்த நான் அவரை வெளியில் அழைத்து வர முற்பட்டபோது ஓலையில் உள்ள தீ எனது உடலில் பற்றிக் கொண்டதால் எனக்கு தீ காயம் ஏற்பட்டதுடன் மனைவிக்கும் சிறு காயம் ஏற்பட்டதாக அழகையா தெய்வநாயகம் (71 வயது) தெரிவித்தார்.

இதன்காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் அனுசரனையில் கனடாவில் வசிக்கும் பொறியியலாளர் ஜெயக்குமார் சின்னத்துரை மற்றும் க.பிரசாந்த் ஆகியோர் வழங்கிய நிதி உதவி மூலம் உதவி வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது வீட்டுக்கு தேவையான சமையல் பாத்திரங்கள், உலர் உணவு பொருட்கள் மற்றும் சிறு தொகை பணம் என்பன வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் மட்டக்களப்பு மற்றும் கல்குடா தொகுதி கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.